
Q22:419
N21
118380

1008

1008

ஸ்ரீராமஜெயம். 2.9

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருக்குறுங்குடி யென்னும் திவ்யக்ஷேத்திரத்தில்
திருக்கோவிற்கொண் டமர்ந்தோங்கியிருக்கும்

ஸ்ரீ அழகியநம்பியாகிய

ஸ்ரீ, சுந்தரபரிபூரணசுவாமிக்கு

திருத்தொண்டனுகியும் விஷ்ணுபக்தசிரோமணியுமாகிய

# நம்பாடுவார் சரித்திரம்.

இவை

சேலம் ப்ரம்மஸ்ரீ

அருட்கவி, S. T. வெங்கடராயராலியற்றப்பெற்று

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாச்சார்யோபயவேதாந்த
ப்ரவர்த்தகாளாகிய

திருக்குறுங்குடி மடாதிபதி

ஸ்ரீபேரருளாள இராமாநுஜ ஜீயர்சுவாமிகளவர்களுடைய
மடத்தின் பரம்பரையில்

46-வது பட்டம்பெற்று எதிராஜராய் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீமத் சடகோபராமாநுஜ ஜீயர்சுவாமிகள்

அவர்களுடைய க்ஷேமஞ்ம்போல்

திருநெல்வேலிடவுன் மேலரதவீதி

ஸ்ரீபாப்பிரகாசினி அச்சியந்திரசாலையில்

உள் டைட்டில் முதல் 22-வது பக்கம் வரையிலும்

திருநெல்வேலிப்பாலம்

ஆண்டவன் அச்சாபீசில்

23-வது பக்கம் முதல் கடைசி வரையிலும் அச்சிடப்பட்டது.


முதற் பதிப்பு] 1921 [காப்பி(125)

ரௌத்திரி ஹு 1096-ம் ஹு மார்கழி மீ

காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

118380

ஸ்ரீ ராமஜெயம்.
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருக்குறுங்குடி யென்னும் திவ்யக்ஷேத்திரத்தில்
திருக்கோவிற்கொண்டமர்ந்தோங்கி யிருக்கும்
ஸ்ரீ அழகியநம்பியாகிய
ஸ்ரீ சுந்தரபரிபூரணசுவாமிக்கு
திருத்தொண்டனாகியும் விஷ்ணுபக்த சிரோமணியுமாகிய

# நம்மாழ்வார் சரித்திரம்.

இவை
சேலம் ப்ரம்மஸ்ரீ
அருட்கவி, S. T. வெங்கடராமயராலியற்றப்பெற்று
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாச்சார்யோபயவேதாந்த
ப்ரவர்த்தகராகிய
திருக்குறுங்குடி மடாதிபதி
ஸ்ரீ பேரருளாள இராமாநுஜ ஜீயர்சுவாமிகளவர்களுடைய
மடத்தின் பரம்பரையில்
46-வது பட்டம்பெற்று எதிந்திரராய் எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீமத் சடகோபராமாநுஜ ஜீயர்சுவாமிகள்
அவர்களுடைய க்ஷேமனம்போல்

திருநெல்வேலி டவுண் மேலரதவீதி,
ஆரியப்பிரகாசினி அச்சியந்திரசாலையில்,
அச்சிடப்பட்டது.

முதற்பதிப்பு 1921. காப்பி (125)
ரௌத்திரி ஸ்ரீ 1096 ம் ஞு மார்கழி மீ

காப்பி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# விளம்பரம்.

இந்த க்ரந்தகர்த்தாவாகிய என்னாலியற்றி அச்சிடப்பட்டிருக்கும் திருக்குறுங்குடி க்ஷேத்திரபுராண சங்க்ரஹக் கும்மியும், ஷை திருக்குறுங்குடி ஸ்ரீபேரருளாள ராமாநுஜஜீயர் சுவாமிகளவர்களுடைய மடத்தின் பரம்பரைச்சிறப்பும், ஸ்ரீவிஷ்ணுபக்த சிரோமணியாகிய நம்பாடுவார் சரித்திரமும் வேண்டியவர்கள் ஷை திருக்குறுங்குடி மடத்தில் கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளலாம்.

சேலம் அருட்கவி

S. T. வெங்கடராவ்.

1068
29 JUN 1921

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ சுந்தரபரிபூரணாய நம:

# நூல் வரலாறு.

1. கடலேழால் சூழப்பட்ட நெடிய இவ்வுலகின்கண் பூமிப்பிராட்டியாரின் திருமுகமண்டலம்போல் விளங்கி நீர்வளம், நிலவளம், குடிவளம், மலைவளம்,-முதலிய சகலவளங்களும் மென்மேலும்பெருகி தருமதேவதைக்கு இருப்பிடமாகியும் திருமகள் களித்தோங்கும் ஜோதிபுரி என்னும்நகரத்தை மநுநீதிவழுவாமல் ஆழிசெலொருகடமைவாங்கி மன்னுயிர்களனைத்தையும் தன்னுயிர்போல்பாவித்து மனோ, வாக்கு, காயங்களை, ஈசுவரனிடத்திலேயேநாட்டி செங்கோல்நடாத்திவந்த சுகுணவான் என்னும் மஹாராஜன் இம்மையில் பெறக்கூடிய பாக்கியங்களையும் பெற்று மகிழ்ச்சியாய்வாழ்ந்து மறுமையிலடையக்கூடிய சாலோகம்,-சாமீபம்,-சாருபம்,-சாயுஜ்யம்,-என்னும் பதங்கள் நான்கையும் அடையவேண்டுமென்ற பேராவல்மிகுதியால் தன்னுடைய இராஜ்ஜியத்தில் வேதவித்தாகவிளங்கும் பூசுரர்களாதி புரோஹிதர்களையும், மந்திரிபிரதானிகளையும்,-தன்னுடைய அரண்மனைக்கு வரவழைத்து தான்கொண்டிருக்கும் கருத்தைவெளியிட அதைக்கேட்ட சகலமானவர்களும் அறநெறிவழுவாமல்அவனியை அரசுபுரிந்துவரும் ஆண்டவனே, அறங்களையே பிருதாகப் பூண்டவனே, இந்நகரில் விப்பிரகுலதிலகராகியும் வேதாகமசாஸ்திரங்களெல்லாவற்றையும் கற்றுணர்ந்து தேர்ச்சியடைந்து வேதபாரங்கதராய்விளங்கும் ஸோமசர்மாவென்னும் திருநாமத்தைப் பூண்ட ஓரந்தணரிருக்கின்றார் அவரை புரோஹிதராகக்கொண்டு சகலமனோபீஷ்டங்களையும் அருளக்கூடிய அற்புதமாகிய சத்ரயாகத்தை நடத்தினால் தங்களுடைய திருவுள்ளத்தில்கொண்ட எண்ணம் நிறைவேறுமையாவென்று தெரிவித்துக்கொள்ளவே

மன்னவன் மனமகிழ்ந்து அவ்வாறே தன்னுடைய அமாத்தியர்களில் சிறந்தபுத்திசாலிகளாகிய விவேகதிவாகரன்,—ஞானசந்த்ரோதயன்,—என்னும் இருவர்களிடம் ஸோமசர்மாவை அரண்மனைக்கு அழைத்துவரும்படி ஆக்ஞாபிக்கவே தக்ஷணம் அவ்வமைச்சர்களும் அரசனுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு சகலமான வாத்தியகோஷத்தோடும் திவ்யாலங்காரமாகிய முத்துச்சிவிகையையும் எடுப்பித்துக்கொண்டு விப்ரகுலோத்தமர்வசிக்கும் மனைக்கேகி வேந்தன்கொண்டகருத்தை நிறைவேற்றும் சுவாமியென்று வேண்டி அடிபணிந்து சிரமேற்கரங்கூப்பிநிற்கும் மந்திரிகளின் மனதிற்கிசைந்து உடனே ஸோமசர்மா பல்லக்கில் ஆரோகணித்து மங்களகோஷத்துடன் அரசனுடைய சமுகம் வந்துசேர்ந்தான்.

2. மன்னவன் உடனே சிங்காதனம்விட்டெழுந்திருந்து அர்க்யபாத்தியமுதலிய அந்தணருக்குச்செய்யும் மரியாதைகளெல்லாம் அணுவேனும் வழுவின்றிச்செய்து மறையவராகிய ஸோமசர்மாவினுடைய பாதங்களில் தனதுமணிமுடிபதிய தீர்க்க தண்டம்சமர்ப்பித்த சுகுணவானாகியவேந்தனுக்கு மறையவனாசிகூறி இருக்கச்செய்து அரசன் தெரிவித்துக்கொண்டபிரகாரம் இயாகத்திற்குவேண்டிய சகலமானசாமான்களும் சேகரம் செய்வித்து இயாகசாலையும் முறைப்போலமைத்து ஐம்பத்தாறு தேசத்து மன்னர் மண்டலீகர்களுக்கும் இயாகமஹோத்ஸவப்பத்திரிகைகளும் அனுப்பி வரப்பட்டவர்களுக்குத் தகுந்தவிடுதிகளும் தயார்செய்து நல்லசுபமுகூர்த்தத்தில் இயாகம்செய்விக்கத்தொடங்கி ஸோமசர்மா புரோஹிதஸ்தானம்வஹித்து மன்னவனாகிய சுகுணவானுக்கு இயாகதீக்ஷைமுதலிய சுபசடங்குகளும் செய்வித்து வேதவிதிப்படி மகத்தைநடத்துகையில் இயாகபௌரோஹித்யம் வஹித்த ஸோமசர்மாவென்னும் விப்ரோத்தமனானவன் தன்னுடைய ஜன்மாந்தரவினைப்பயனால் மந்த்ரலோபமாயும், க்ரியாலோபமாயும், இவ்விதமாய நடத்தியகாரணத்தால் சூலைநோயேற்பட்டு அதினின்று நிவர்த்தியாகாமலும், இயாகத்தை சம்பூரணமாய் நிறைவேற்றாமலும், மரணமடைந்து



தேவர்களிட்ட சாபத்தின்படி மறுஜென்மத்தில் ப்ரம்மராக்ஷஸனாயுதித்து மஹேந்திரபருவதச்சாரலில் அடர்ந்தகானகத்தில் வசித்து மன்னுயிர்களையெல்லாம் ஹிம்ஸித்துக்கொண்டிருந்தான்.

3. மன்னவனாகிய சுகுணவான் தான் ஆரம்பித்து நடத்திய மகமானது திரவியலோபமாதி பலகுறைவுகளினால் சம்பூர்ணமாய்நிறைவேறாமல் இயாகநஷ்டமாகிய தோஷத்தினாலும் ஸோமசர்மாவாகிய மறையவனடைந்திருக்கும் ப்ரம்மராக்ஷஸஜென்மத்தைப்போக்கி ஸத்கதிபெறச்செய்யவும் தானும் சாக்ஷாத் ஸ்ரீ அழகியநம்பியாகிய ஸ்ரீ சுந்தரபரிபூர்ணேசனுடைய அழிவில்லாதகிருபைக்குப் பாத்திரமாகவென்றும் இயாகசபையத்தில் ஸோமசர்மாவுக்கு தேவர்களால் தயவுடனளித்த சாபவிமோசனப்படிக்கும் தானும் மறுஜென்மத்தில் மஹேந்திரவெற்பின் தென்றிசையிலுள்ள ஜம்புகபாஷாணமென்னும் கரிப்பாறையிலுள்ள பறச்சேரியில் பறையனாகவுதித்து நம்பிசாம்பான் என்னும் நாமம்பூண்டு பூர்வஜென்ம வாஸனைபலத்தினால் சண்டாளகிருத்தியத்தைக்கழுவாமல் சுவாத்தியானத்துடன் நாட்கழித்து எக்காலத்திலும் சாக்ஷாத் வைகுண்டாதிபனை துதித்துக்கொண்டு தக்ஷிணபதரிகாசிரமமாகிய திருக்குறுங்குடியிலெழுந்தருளியிருக்கும் எம்பெருமானாகிய அழகியநம்பியென்னும் ஸ்ரீ சுந்தரபரிபூரணசுவாமிக்குத் திருத்தொண்டனாகிமாஹேந்திரபருவதத்தின் தாழ்வரையில் பெருகும் சிந்துநதியில் திருப்பாற்கடல் என்னும் படித்துறையில் ஸ்நானம்செய்து அழகியநம்பியை தினப்ரதியும் தவறாமல் தரிசனம்செய்தும் அஷ்டாக்ஷர நாமனுடைய திவ்யகல்யாண குணகீர்த்தனங்களையே எக்காலத்திலும் கைசிகமென்னும் இராகத்திலேயே வீணையிலும் வாக்கானும் கானம்செய்துவந்ததால் காரணப்பெயராக நம்பாடுவான் என்னும் திருநாமம்பூண்டு பகவத்பக்திசெய்துகொண்டும் சகலபாபத்தையும் போக்கி அழிவில்லாத முக்தியை அருளும் ஸ்ரீ ஹரிதினமாகிய ஏகாதசி விரதத்தையும் முறைப்படி அநுஷ்டித்துவந்தான்.

4. பின்னர் பறையனாகிய நம்பாடுவார் தீர்த்தயாத்திரை யும் திவ்யதேசங்களிலோங்கும் மூர்த்திதரிசனமும் செய்யவே ண்டுமென்ற ஆவல்கொண்டு தான்வசிக்கும் நரிப்பாறையென்னும் ஊரைவிட்டுப்புறப்பட்டுப் பன்னிரண்டுவருஷகாலம்வரையிலும் திவ்யதேசசஞ்சாரம்செய்து அவ்வவ்விடங்களிலுள்ள புண்ணிய தீர்த்தஸ்நானங்களும் திவ்யமூர்த்திகளின் தரிசனங்களும் செய்துக்கொண்டு மனமகிழ்ச்சியாய்த்திரும்பி தன்னுடைய ஜெனனபூமியாகிய ஜெம்புகபாஷாணம் என்னும் நரிப்பாறைக்கு வந்துசேர்ந்து வழக்கம்போல் சிந்துநதியில் திருப்பாற்கடலென் னும் ஸ்நானகட்டத்தில் நீராடி திருமண்காப்பணிந்து ஸ்ரீ அழகிய நம்பியின் திருவடிகளை மனதில்தியானித்து அன்றையதினம் கார்த்திகைமாதமும்,-சுக்கிலபக்ஷமும்,-ஏகாதசியும்,-கூடிய ஸ்ரீ ஹரிதினமானதால் அழகியநம்பியாகிய ஸ்ரீ சுந்தரபரிபூரண சுவாமியை தரிசனம்செய்யவேண்டுமென்று அதிகஆவலுடன் செல்லும்வழியில் பூர்வகாலம் இயாகம்நடத்தியசமயத்தில் மந் திரலோபக்கிரியாலோப தோஷத்தின்காரணமாய் தேவர்களால் சபிக்கப்பட்டு பின்னும் அத்தேவர்களாலேயே திருவாய்மலர்ந் தருளிய சாபநிவர்த்தியின் காரணத்தாலும் தன்னுடைய பூர்வ ஜென்மத்தின வினைப்பயனாலும் ஸோமசர்மாவாகிய ப்ரம்மராக்ஷ தன் சுதனவானாகிய நம்பாடுவாரென்னும் பக்தனை வழிமறித்து என்னுடைய குக்ஷிபாதையைத்தீர்த்துக்கொள்ள நான் உன்னைக் கொன்று தின்று பசியாருவேனென்று கூற்றுவனைப்போல் எதிரில் நின்று தடுத்துக்கொண்டான்,

5. அத்தருணத்தில் ஸ்ரீ ஹரிபக்தசிரோமணியாகிய நம்பா டுவான் ப்ரம்மராக்ஷதனைப்பார்த்து மனதிற்கிஞ்சித்தேனும் பய மில்லாமலும் தன்னுடைய தேகத்திலும் பிராணனிலும் அனுவள வேனும் இச்சையில்லாமலும் இவ்வுலகவாழ்க்கையை வெறுத்து தீர்க்கவைராக்கியத்தையே கடைபிடித்தொழுகும் பரமபாகவத னாதலும் தனக்கேற்பட்ட பிராணஹானிக்காக உள்ளத்தில் வருந்தாமல் சாக்ஷாத் ஜெகதீசுவரனாகிய ஸ்ரீ சுந்தரபரிபூரணே னுடைய திவ்யதரிசனம்செய்வதற்கு இடையூறு நேர்ந்தே



யென்று மகத்தான வியசனமேலிட்டால் ஆற்றொணாத்துயரக் கடலிலாழ்ந்து தேகமெல்லாம் விடவிடத்து நடுக்கமுற்று மதி மருண்டு நெஞ்சயர்ந்து நாவுலர்ந்து தன்னிருகரங்களையும் சிர ஸின்மீதுகூப்பிக்கொண்டு பெருமூச்செறிந்து ஸ்ரீ அழகியநம்பி யின் திருவடித்தாமரைகளில் தன்கருத்தைநாட்டி ஹே ஆபத் பாந்தவா,-அநாதரக்ஷகா,-ஆதிமத்யாந்தரஹிதா,-பன்னகசாயி, பாற்கடல்சயனா,-பதிதபாவனா,-பக்தபரிபாலனா,-அனுமுதல்மே ருவரை யாவற்றிலும்நிறைந்துள்ள பரிபூரணா,-புராணபுருஷா, புண்யஸ்லோகா,-கருணாபரனா,-கார்முகில்வண்ணா,-கமலக்கண்ணா, கெருடவாஹனா,-கௌஸ்துவமணிபூஷணா,-சங்க,-சக்ர,—கதா, பத்ம,-சாரங்க,—நந்தக,—பீதாம்பரதரா,—சகல புவனாதாரா,— சாக்ஷாத் ஸ்ரீமகா லெக்ஷ்மிக்கிருப்பிடமாகிய அழகியவக்ஷஸ் தலத்தாலோங்கும் சர்வேசுவரா, உன்னுடைய திவ்யதரிசனார்த்த மாதவரும் இவ்வடியேனுக்கு இச்சமயத்தில் ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப்போக்கிப் பாதுகாக்க உன்னையன்றி வேறுகதியுண் டோ? முதலையால்பிடிக்கப்பட்ட கெஜேந்திரனுடைய முறை க்குவந்து தக்ஷணமே ஓடோடியும்வந்து கராவின்கழுத்தை உன் னுடைய திருக்கை சக்கரத்தாலரிந்து கரிராஜனை இரக்ஷித்த கஜேந்திரவரதா? தந்தையால்விதிக்கப்பட்ட மரணதண்டனை களுக்கு சற்றேனும்பயப்படாமல் உன்னையே துதித்துவந்த ப்ரஹ்லாதாழ்வானுடைய இடர்நீக்கவந்து ஸ்தம்பத்தினிரு ந்து நரசிம்மமாக ஆவிர்பவித்து துஷ்டனாகிய ஹிரணியகசிபுவி னுடைய மார்பைப்பிளந்து இரக்தசம்ஹாரம்செய்து திரி லோகத்தையும் ப்ரஹ்லாதாழ்வானையும் காத்தருளிய அஷ்டா க்ஷரஸ்வரூபனே?—குடிலசித்தத்தையுடைய கௌரவர்களால் ப்ராணாவஸ்தைக்கும் மேலாகிய மானபங்காவஸ்தையிலும் முன்று முறையிட்டுக்கதறிய பாஞ்சாலியின் மானத்தைக்காத்திரக்ஷித்த ஸ்ரீகோபாலகிருஷ்ணா? இன்னும் பூமி, விண், பாதாளம், என் னும் மூன்றுலகத்திலுமுள்ள துர்ஜனர்களை சிக்ஷித்து சர்ஜனர்களை இரக்ஷிப்பதற்காக அந்தந்த சமையங்களுக்கேற்றதாக அனந்தவ தாரங்களெடுத்தும் இணையற்ற பலதிருவிளையாடல்களைப்புரிந் தும் பக்தவத்ஸலனென்னும் பிருதைவஹித்த பரந்தாமனே!

இந்தருணம் மகாபாபியாகிய இவ்வரக்கன் கையிலகப்பட்டேன் என்னைப் பாதுகாத்து உன்னுடைய திவ்யதரிசனத்தை அடியேனுக்கீந்து பரிபாலிக்கவேண்டும். ஸ்ரீமந்நாராயணாவென்று பற்பல விதமாய்த் துதித்துப் பின்பு பிரம்மராக்கதனைப்பார்த்து பிராணபீதியென்பது சற்றேனுமில்லாமல் தன்னிருகரங்களையும் சிரஸின்மீதுகூப்பி பரமதயாளுவே பகவானை தரிசிக்கப்போகும் அடியேனை தயவுசெய்து விட்டுவிடவேண்டுமென்று அநேகவிதமாய்க்கேட்டும் இராக்கதன்கேட்காததினால் பக்தன் நான்சென்று அழகியநம்பியை தரிசனம்செய்துவிட்டு உடனேவந்து உனக்கிரையாகின்றேன அப்படிக்கு நான் வராமற்போவேனேயாகில் ஏகாதசிவிரதத்தைக்கெடுத்தவர்கள் அடையும் நரகத்தை நானடைவதுமன்னியில் நான் அநுஷ்டித்துவரும் ஏகாதசிவிரத பலனையும் நான் எக்கணமும் கைசிகராகப்பண்களால் கானம் செய்துவரும் ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யநாமஸங்கீர்த்தன குணகணபலனையும் இழந்துவிடக்கடவேனென்றும் இன்னும் முக்கியமாகிய பதினொரு சத்தியவாக்குகளைப்புகன்று ஸ்ரீஅழகியநம்பியை சாக்ஷிவைத்து ஆணையிட்டுக்கொடுத்து பிரம்மராக்கதனுடைய அநுமதிப்பிரகாரம் அதிகுதூகலத்துடன் பகவத்தரிசனத்திற்குச்சென்று தான் பறையனானதால் ஆலயத்திற்கணுகாமல் அதிதூரத்தில்நின்று அழகியநம்பியைத்தோத்திரம்செய்து வழக்கம்போல் கைசிகஇராகத்திலேயே பற்பலவிதமான பண்களைப்பாடிக்கொண்டு தரிசிக்கவென்று ஆலயத்தின் முன்பாகத்திலோங்கும் திருத்தேரடியில் நின்று நம்பியை உள்ளன்புடன் உற்றுப்பார்க்கலானான்.

6. இவ்விதமாய் பக்தனாகிய நம்பாடுவான் பகவானை தரிசிக்கப்பார்க்க இடையில் நம்பியின் சந்நிதியில் பலிபீடமும், துவஜஸ்தம்பமும், கருடாழ்வாரும், இருப்பதால் தனக்கு நம்பியினுடைய தரிசனம் ஆகாமல் மறைந்திருப்பதினால் மனவருத்தமுற்று நம்பாடுவான் தோத்திரம்செய்யவே பகவான் பக்தன்பால் கிருபைகூர்ந்து பலிபீடத்தையும், துவஜஸ்தம்பத்தையும் வடபுறமாகச்சற்று விலகியிருக்கச்செய்தும் தன்னுடைய நெடிய



சாக்ஷிக்குத்தகுந்தபடி உயர்ந்துவிளங்கும் சந்நிதிகருடாழ்வாரை பக்தன்காரணமாக குழைந்திருக்கும்படிச்செய்தும் பக்தனுடைய மனமகிழ்ந்த தன்னுடைய திவ்யதரிசனத்தையும் கருணையுடனளித்தான். பக்தனாகிய நம்பாடுவான் அழகியநம்பியை திரிகரணசுத்தியாயும் தன்னிருநயனங்களுங்குளிர தரிசனம்செய்து அநேகவிதமாய்த்துதித்து கண்களிலானந்தபாஷ்பம் பெருக தேகபரவசனாய் திவ்யநாமஸங்கீர்த்தனங்களை கைசிகஇராகத்தில்பாடியும் மெய்மறந்து ஆனந்தத்திருக்கூத்தாடியும் உடல் பொருளாவியையும் நம்பிக்கே அற்பணம்செய்து நெடுநேரம் தரிசித்து பிரம்மானந்தவாரிதியிலாழ்ந்து பின்னர் அத்தலம்விட்டகன்று சத்தியத்திற்குட்பட்டு பிரம்மராக்கதனுக்குத் தன்னுடலை திரிகரணசுத்தியாய் ஆகாரமாயளிப்பதற்காக அதிதீவிரமாய் அரக்கன்வசிக்கும் கானகத்தை நோக்கிச்சென்றான்.

7. இவ்வித திடசித்தத்துடன் நம்பாடுவான் செல்லும் வழியில் சர்வவியாபியாகிய எம்பெருமான் ஓர் விருத்தவேதியனுருக்கொண்டு பக்தனிடமுன்பக்கத்தில் வழிமறித்துநின்றுக்கொண்டு இவ்வழியாகச்செல்லவேண்டாம் கொடிய இராக்கதர்களும் துஷ்டமிருகங்களும் வசிக்கும் அடர்ந்தகானகத்தைச் சேரவும்செய்து உனக்குப்பிராணஹானியுங்கேரிடுமாகையால்வேறு வழியாகப்போவென்று தடுத்துக்கொண்டு பக்தன்பக்கல் அணுகவே நம்பாடுவான் தன்னிருகரங்களையும் சிரசின்மீதுகூப்பிக்கொண்டு மிகுந்ததாழ்மையாய் ஆண்டவரே அடியேன் சண்டாளன் உயர்குலத்தோர் என்பக்கம்வரலாகாதென்று விலகிவிலகி ஓடியும் மாயாப்பிராம்மணன் விடாமலே அடுத்தடுத்துப் பற்பல நீதிகளைக்கூறித் தடுத்துக்கொள்ள பக்தன் மறையோனைப் பலவிதமாய்ப்பிரார்த்தித்து சுவாமி அடியேன் ஒருபிரம்மராக்கதனுக்கு ஆகாரமாவதாக வாக்களித்திருப்பதால் சத்தியம் தவறாட்டேன் இவ்வழியாகத்தான் செல்வேனென்ன மாயாபிராம்மணனாகிய பகவான் பக்தனுடையமனதைப்பரிக்ஷிக்க பலவிதத்தில் போதித்தும் பயபயங்களைக்காட்டியும் பாகவதோத்தமன் சத்தியத்தைப்பார்க்கிலும் இவ்வாக்கைபெரிதல்லவென்று உறுதியா

யக்கூறி நான் இவ்வழியாகவேசென்று அடியேன் பிரம்மராக்க
தனுக்கேஆகாரமாய் அநித்யமாகிய இவ்வுலகவாட்கையைவெறு
த்து நசுவரமாகிய இந்ததேகத்தையும்விடுத்து சாக்ஷாத் ஜெக
நீசுவரனாகிய ஸ்ரீசுந்தரபரிபூர்ணேசனுடைய திருவடித்தியான
பரனாய் எக்காலத்திலும் அழிவில்லாத மோக்ஷத்தையே அடை
குவேனென்று ஸ்ரீ அழகியநம்பியின்பேரில் ஆணையிட்டு உறுதி
யாகச்சொல்லவே மறையவனுருவாய்வந்த எம்பெருமான் மன
தில் அதிகமகிழ்வடைந்து இவனைப்போன்ற உண்மையான பரம
பாகவதன் வேறு உண்டோவென்று திருவுள்ளத்தில் களிப்புற்று
மேலுக்கு அவனிடத்தில் வெறுப்புற்றவரைப்போல் பாவனை
காட்டி ஆனால் உன்தலைவிதியென்று வருத்தமடைந்தவரைப்
போல் சொல்லிக்கொண்டு பக்தனிடமிருந்தகன்று மறைந்து
விட்டான்.

8. பக்தசிரோமணியாகிய நம்பாடுவான் அதிசீக்கிரமாக
ஓடோடி பிரம்மராக்கதனிடம்சேர்ந்து ஐயனே, அடியேனைப்
புனிதனாக்குவதற்காக அகஸ்மாத்தாய் வழிமறித்தென்முன்றோ
ன்றிய புண்ணியவானே, இவ்வடியேன் இதோவந்துவிட்டேன்
என்னை இந்தக்ஷணமே கொன்றுதின்று உன்னுடைய கொடிய
பசியைத்தணித்துக்கொள்ளும் ஆப்தனேயென்று பிரார்த்தித்
துக்கொண்டு மானிடஜென்மத்துக்குரிய மரணபயம் சற்றுமில்
லாமல் தத்சமயத்தில் மலர்ந்தசெந்தாமரைக்கொப்பாக குளிர்ந்த
மனமாக விளக்கிக்காட்டும் அலர்ந்தமுகத்தோடு தன்முன்னிற்
கும் ஹரிபக்தக்ரேசனைக் கண்டமாத்திரத்திலும் முற்பிறப்
பில் இயாகசமையத்தில் தேவர்களாலளித்த சாபத்தினுடைய
வும் அவர்களாலேயே மறுபடியும் திருவாய்மலர்ந்தருளிய அநுக்
கிரஹப்பிரபாவத்தினாலும் தன்னுடைய சாபம் நிவர்த்தியாகி
சத்கதி அடையும் சமையம் வந்துவிட்டதாலும் ஸோமசர்மா
வாகிய பிரம்மராக்கதனுக்கு முன்னிருந்த எண்ணமெல்லாம்நீங்கி
நல்லக்ஞானமுதித்து,உன்னைநான்புசியேன், நீ பரமபாகவதோத்
தமன் நீ அநுஷ்டித்துவரும் ஏகாதசி விரதபலனையும் பகவானு
டைய திவ்யகல்யாணகுணங்களை கைசிகஇராகத்தில் அநேக



பண்களாகப்பாடி அதினால் நீ அடைந்திருக்கும் பலன்களையும்
எனக்குதத்தம்செய்துக் கொடுத்துவிட்டு நீ சுகமாகப்போவென்
றுசொன்னான்.

9. அதைக்கேட்ட நம்பாடுவான் நான் ஏகாதசிவிரதபலனை
யும் கைசிகப்பண்பலனையும் உனக்கு தத்தம்செய்துக்கொடுப்ப
தாக வாக்களிக்கவில்லை முன்சொன்னபடி என்னைத்தான் நீபுசி
த்து உன்னுடைய பசிதீர்ந்து நீ திருப்தி அடையவேண்டுமென்று
பக்தன்சொல்லவும், பிரம்மராக்கதன் உன்னைநான்புசியேன் நீ
அநுஷ்டித்துவரும் புண்ணியபலனைத்தான் எனக்கு நீ கொடுக்க
வேண்டுமென்றும், இருவரும் ஓயாமல் வாக்குவாதம் செய்துக்
கொண்டிருந்தார்கள்.

10. இவ்விதமாய் வழக்கிட்டுக்கொண்டிருக்கும் இவ்விரு
வர்களுக்கும் பூர்வஜென்மத்தில்கிடைத்த சாபம் நிவர்த்தியாகி
சத்கதிஅடையக்கூடிய நற்காலம் நெருங்கிவிட்டபடியாலும் பக
வானாகிய மாயாமறையோன் அவ்விடமும்தோன்றி இருவர்களு
டைய வழக்கையும்கேட்டு பக்தனை தனியாக அழைத்துச்சென்
று மத்யஸ்தம்செய்பவனைப்போல் பாவனைகாட்டி பக்தனிடம்
பிரம்மராக்கதன்கேட்கும் ஏகாதசி விரதபலனையும் கைசிகப்
பண்பலனையும் தத்தம்செய்துக்கொடுத்துவிட்டுப் போம்பிள்
ளாய் ஏன் அநியாயமாக உன்ஜீவனை நீயாகவே இழக்கமன்றாடு
கின்றாய் ஏகாதசியைக்கண்டதுயார்? கைசிகத்தைக்கண்டது
யார்? இவைகளெல்லாம் வாக்சாதுரியமுள்ள நாவலோர்களால்
எழுதிவைத்த புராணக்கட்டுக்கதையேயொழிய வேறுண்டோ
பைத்தியக்காரனே? சுவற்றைவைத்துக்கொண்டல்லவா சித்
திரம் எழுதவேண்டுமென்ற பழமொழியும் நீ அறிந்திலையோ?
அந்தோ? ஆக்கையிருந்தாலல்லவா அளவற்றசற்கருமங்களைச்
செய்து அகிலசாம்பிராஜ்ஜியங்களையும் பெறலாம் ஆக்கையழி
ந்தபின் வேறுபோக்குண்டோ? உன்மத்தனே? இவ்வுலகில்
அளவிலடங்காத மகாயோகிகளும் தபஸ்விகளும் ஸ்வாஸபந்த
னத்தாலும் அஷ்டாங்க யோகாப்பியாஸங்களாலும் தற்பஸா

தனங்களினுலும் அநேகஆயிரவருஷகாலமாக இவ்வுலகின் உயி
ருடனிருந்து அவரவர்களுக்குரிய சத்ஸாதனங்களைச் செய்துக்
கொண்டிருக்கின்றூர்கள் அப்பேர்ப்பட்ட மஹான்களைக்காட்டி
லும் நீ புத்தியிலுயர்ந்தவனே? அல்லது ஜாதியிலுயர்ந்தவனே?
அல்லது தவத்திலுயர்ந்தவனே? கல்வியிலுயர்ந்தவனே? என்
வார்த்தையை உல்லங்கனம்செய்யாமல் பிரம்மராக்ஷதன்கேட்
கப்பட்ட பலன்களை தத்தம்செய்துக்கொடுத்துவிட்டு சுகமாய்ப்
போவென்றும், பக்தனைவிட்டகன்று, பிரம்மராக்கதனை தனியாக
அழைத்துச்சென்று உனக்கு வலுவில்கிடைக்கும் ஆகாரத்தை
ஏன் இழக்கமுயலுகின்றாய் ஈராமமிசக்கிடைப்பது அதிகதுர்
லபம் நீபிரயத்தினம்செய்யாமலே உன்னுடைய பாக்கியவசத்
தால் பலவந்தமாய்க்கிடைக்கும் ஆகாரத்தை வீணாகவிட்டுவிடா
மல் நரனை இக்ஷணமேகொன்றுதின்று சுகமாக இருப்பாயென்
றும் "அன்னமயம்ப்ராணமயமென்று" நூல்களில்புகலுவதை நீ
இராக்கதனுகையால் அறியமாட்டாயென்றும் ஒவ்வொருவரிட
மும் தனித்தனியாக தன்னால்கூடியவரையிலும் போதித்து அவ்
விருவர்களுடைய மனதைப்பரிக்ஷித்துப்பார்த்தும் அவ்விருவர்
களுடைய *மனோதிடத்திற்கு சந்தோஷமடைந்து பகவானாகிய
மாயாமறையோன் நம்பாடுவானிடம், நீ அநுஷ்டித்துவரும், ஏகா
தசிவிரதபலனையும், கைசிகப்பண்பலனையும், முழுவதும் கொடுக்
காவிட்டாலும் ஒவ்வொரு புண்ணியபலன்களிலும் பதினாறில்
ஒருபங்காவது இவ்வரக்கனுக்கு நீ தத்தம்செய்துக்கொடுத்து
இவ்வரக்கனுடைய மனதைத்திருப்திசெய்வித்தேதான் தீரவே
ண்டுமென்று தானே மத்தியஸ்தனாகவும் நியாயாதிபதியாக
வுமிருந்து தீர்ப்புசெய்யவே அவ்விதம் பக்தனுகிய நம்பாடுவாரும்
ஒவ்வொரு புண்ணியபலன்களிலும் பதினாறில் ஒருபங்கு தத்தம்
செய்துக்கொடுக்க அதை திரிகரணசுத்தியாக ஏற்றுக்கொண்ட
பிரம்மராக்கதனும் திருப்தி அடைந்தேனென்னவும் அன்றைய
தினம் கார்த்திகைமாசத்திய சுக்லபக்ஷத் தேகாதசியுமானதால்
பகவானாகிய ஸ்ரீ சுந்தரபரிபூரணேசன் திருவுளமகிழ்ந்து பக்த
ரிருவர்களுக்கும் முன்ஜென்மத்தினுடைய வரலாற்றையும் சாபம்
கிடைத்தவிவரமும் அவரவர்களுக்கே மனதிற்றோன்றும்படிக்



குக திருவருள்புரிந்தும் ஸோமசர்மாவென்னும் விப்பிரோத்த
மன் முற்பிறப்பில் மந்திரலோபக்கிரியாலோப தோஷத்தால்
இயாகத்தைநடத்திவைத்து அதினாலடைந்த பிரம்மராக்கத
ஜென்மத்தை சுருணவானாகிய வேந்தன் திரவியலோபதோஷத்
தால் சண்டாளகுலத்திற்பிறந்திருக்கும் நம்பாடுவாரென்னும்ஸ்ரீ
வைஷ்ணவபக்தனால் நிவர்த்திசெய்வித்தும் பக்தனையும் சண்டாளஜென்
மத்திலிருந்து ஜென்மஸாபல்யமாக்கி அவனுக்கும் ஸத்கதியளி
க்கத்தானே காரணபூதனாகயிருந்து அடியார்களிருவர்களிடத்தி
லும் திருவுளங்கூர்ந்து இருவருக்கும் ஏககாலத்தில் தக்ஷணமே
தன்னுடைய ஸ்வரூபத்துடன் ஸ்ரீபூமிநீளாசமேதனாகவும் கரு
டாரூடனாகியும் திவ்வியதரிசனமளித்து இருவர்களுடைய காரி
ணஜென்மத்தையும் போக்கி அம்பரத்தினின்று அமரர்கள் கற்
பகமலர்களைவருஷிக்கவும் தேவதுந்துபிகள் முழங்கவும் நாரத
தும்புராதிகள் தேவகானம்செய்யவும் அப்ஸரஸ்த்ரீகள் நாட்
டியமாடவும் தன்னுடைய சாக்ஷாத்காரமாகியும் அழிவில்லாதது
மாகியுமுள்ள சாலோக, சாமீப, சாரூப, மென்னும் மூன்று
பதத்திற்கும்மேலாகிய சாயுஜ்யபதத்தைக்கொடுக்கவே, பக்தரிரு
வர்களும் வேதங்களாலும் புகழ்ந்துரைக்கவொண்ணாததாகியும்
மகாயோகிகளாலும் காணக்கிடைப்பதற்கருமையாகியும் சகல
காரணகர்த்தவத்துவங்களுக்குடையவனாகியும், ஸ்ருஷ்டி, ஸ்திதி,
ஸம்ஹாரமாகிய முத்தொழில்களுக்கதிபனாகியும் சகல அண்ட
பிண்ட சராசரங்களையும் தன்னுடைய திருவுதரத்தில்வைத்து
இரக்ஷிக்கப்பட்டவனுமாகியும் பரத்[illegible]னுமாகிய ஸ்ரீமந்நாரா
யணனுட்கலந்து அழிவில்லாத பேரின்பமடைந்தோர்கள்.

11. ஸ்ரீமந்நாராயணனுடைய அம்ஸபூதராகிய வேதவி
யாஸமஹாமுனிவரால் அருளிச்செய்த புராணங்கள் மூவாறில்
ஒன்றாகியும் மிகவும்மேன்மைபொருந்திய வராஹபுராணத்திலும்
ஒன்றாகியும் ... பிரம்மாண்ட புராணாதிகளிலும் விரித்துரைத்தும்
நம்பாடுவாரென்னும் பரமபாகவதோத்தமன் ஸ்ரீ அழகியநம்பி
கை கைசிகஇராகத்திலேயே நாமஸங்கீர்த்தனம் செய்துப்புக
ழ்ந்தேற்றியும், ஏகாதசிவிரதத்தையும், அநுஷ்டித்துவந்து கார்த்

திகைமாசம் சுக்கிலபக்ஷத்தேகாதசியில் எம்பெருமானுடைய அழிவில்லாத சாயுஜ்யபதமடைந்தபடியால், கைசிகஏகாதசிமான்மியமென்றும், புகழ்ப்பெற்ற நம்பாடுவார்சரித்திரமென்னும் அற்புதமாகிய இந்நூலை சிவபரத்தில் திருநாளைப்போவாரென்னும் நந்தனார் சரித்திரத்தை ஸ்ரீமத் பரமபாகவதோத்தமர்களால் செய்யப்படும் கதையைப்போல விஷ்ணுபரத்தில் சிறந்ததாகிய இந்த நம்பாடுவார் சரித்திரத்தையும் கதாரூபமாய் நடத்துவதற்கனுகுணமாகவும், சுருதி, யுக்தி, அனுபவம், என்பதற்கிணங்கவும், கதாலாரத்திற்கிசைந்ததாய் நூதனமாக கதைத்தொடர்ச்சிகளும், விருத்தங்களும், கீர்த்தனங்களும், சிந்துகள், முதலியவைகளாலமைத்துள்ள இத்திவ்ய சரிததிரத்தை இயற்றினவர்களும், அச்சிடுவித்தோர்களும், இயாவர்களுமுணரப்புகன்றவர்களும், பக்திஸ்ரத்தையாய்க்கேட்டவர்களும், இம்மையில், அறம், பொருள், இன்பம், வீடு, என்னும், நான்குபுருஷார்த்தங்களும்பெற்று மங்களமாகவாழ்ந்து மறுமையிலும், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யம், என்னும் சதுர்விதபதங்களுமெய்தி ஸ்ரீ அழகியநம்பியாகிய ஸ்ரீசுந்தரபரிபூரணேசனுடைய திருவருளுக்குப்பாத்திரர்களாகியும், சதி, சுதர், செல்வம், தீர்க்காயுளாதி, சகலபாக்கியங்களும், மென்மேலும்பெற்று ஆசந்திரார்க்கமாய் செழித்தோங்கி வாழ்வார்களாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

நூல்வரலாறு முற்றிற்று.

இங்ஙனம்

அடியார்க்கடியன்

சேலம் அருட்கவி S. T. வெங்கடராயன்.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் ராமானுஜாய நம:

ஸ்ரீ ஹரிபக்த சிரோமணியாகிய

# நம்பாடுவார் சரித்திரம்.

## விநாயகர் துதி.

### விருத்தம்.

அம்புலி யோடுவிண்ணை அளந்தமெய்ப் பொருளாமழக
நம்பியின் புகழைப்பாடும் நம்பாடு வார்சரித்ரம்
அம்புவி தனிலியற்ற அம்புலி யணிந்தோனீன்ற
தும்பிமா முகவனுன்றன் துதித்துமே போற்றுவேனே.

ஜெயஜானகி ரமண என்ற வர்ணமெட்டு.

இராகம் நாட்டை—தாளம் கண்டஜாதி ஏகம்.

பல்லவி.

ஜெயவிக்ன ஹரதேவ ஜெயவல்ல பைமணவ.

அநுபல்லவி.

ஜெயசித்தி வணதாதா ஜெயவரப்ர ஸாதா (ஜெ.)

சரணம்.

1

சகல கார்யனுகூலா சர்வேசுவ ரியின்பால
அகில ஆகமமூலா அன்பர்மன லோலா (ஜெ.)

2

கடலை பய றவலுடனே கரும்புமோ தகப்ரியா
அடையும் வடை என்றுண்ட அதிரஸமுண் வாயா (ஜெ.)

3

நம்பாடு வார் சரிதம் நானிலத்தில் நடைபெறவும்
தெம்பாகப் பாடிடவும் தேவனே சரணம் (ஜெ.)

## விஷ்வக்ஸேனர் துதி.

தும்பியின் முறையைக்கேட்டுத் துயரொழித் தாண்டவழக
நம்பியின் பாதமேற்றும் நம்பாடுவார்சீர்பாடி
வெம்பவ மனுகாவேதன்றும் வேலைசூ ழுலகிலோங்க
நம்பினேன் விஷ்வக்ஸேன நல்லருள் புரிவாய்போற்றி.

ஜெயராமா என்ற வர்ணமெட்டு.

இராகம் நாட்டை—தாளம் ஆதி.

பல்லவி.

விஷ்வக் ஸேன ஜெயஜெய

அநுபல்லவி.

விஷ்ணுவின் சேனா நாயகனாகிய

சரணம்.

1

அரவிந்தநாபன் திருவடிபணிந்தேற்றிடும்
அடியார்புகழுரைக்க அன்புகூர்ந்தெனக்கு
சுரவந்த்யாகிருபை கர செய்குவாய்
சுபப்பிரதாயக வி.

2

நம்பாடுவாராம் புகழ்மிகும் நம்பாடுவாராம்
நல்லன்பன்காதையை நலமுறும்தமிழில்
அம்புவிதனில்பாடி இந்த ஆகமம்சீர்பெற
அடியேனுக்கருள்புரி வி.

3

உன்பாதமலரை அளித்தெனக் குன்பாதமலரை
குற்றத்தினையிருந்து உலகிலெண்டிசையிலும்
என்பாடல்சீராய் நடைபெற் றெழில்மிகுந்தோங்கிட
எந்தையே வருமருள்

## சரஸ்வதி துதி.

அவனியின் ஞாதியோடு அண்டச ராசரத்தை
பவனமாம் தன்வயிற்றில் பகுமாய் வைத்துக்காக்கும்
சிவனுமை துதிக்குந்தேவை சிந்திக்கும் பக்தன்காதை
கவனமா யியற்றியோங்க கலைமகள் கழல்தன்போற்றி.



மாதாடபாரதேனோ என்ற வர்ணமெட்டு

இராகம் கமாச் தாளம் சாப்பு.

பல்லவி.

வாணிநல் வாக்கருள்வாய் வனஜன் ராணி

அநுபல்லவி.

வாணிநல் வாக்கருள் வீணைபுஸ் தகபாணி வா.

சரணம்.

1

ஆரண மங்கையுன் அருள்கூர்ந்திவ் வடிமைக்கு
காரணம் தருவாயே கண்டதுபோல் தாயே வா.

2

உனைக் கம்பனாதி அகிலத்து ளும்பாவலர்
ஒவ்வொருவர்க்கும்ஞானம் ஓங்கச்செய்தவென் தாயே வா.

3

நம்பாடுவாரென்னும் நாரணன் பக்தனும்
அம்புவி புகழ்ந்திடும் அவன்காதை அனையவும் வா.

## ஆழ்வாராதியர் பன்னிருவரின் துதி.

விருத்தம்.

நம்பியின் புகழைப்பாடும் நம்பாடு வார்தம்காதை
எம்பிரா னடியரெல்லாம் கற்கவோர் சரிதமாக
அம்புவி தனியியற்ற ஆழ்வார்பன் னிருவரின்பா
தம்புஜம் சிரமேற்பூண்டு தமிழுரை செய்குவேனே.

## ஆழ்வாராதியர் பன்னிருவர்களின் பெயர்.

விருத்தம்.

பொய்கைபூ தன்பேயமழிசை பொருளுணர்ந் தோங்குமாறன்
மெய்மைசேர் குலசேகரன்சீர் மேவிய பெரியாழ்வார்தம்
கைதனில் வளர்ந்தஆண்டாள் கனமிகும் தொண்டர்பாணர்
மைதிறம் வாய்ந்தநீலன் மதுரமாம் கவியாம்மாதோ.

## உடையவர் துதி.

புடவியில் நம்பியின்சீர் புகழையே பாடுமுண்மைப்
படிநெறி வழுவாபூத்தன் பாடுவான் சரிதந்தன்னை
குடமுனி மகிழ்தென்சொல்லால் குணமிகும் கீதமாக்க
உடையவ ருமதுதிவ்ய உபயபா தங்கள்போற்றி.

## மஹேந்திரகிரீசுவரன் றுதி.

கிரிராஜ வரதன்பாதம் கங்குலும் பகலுமேற்றி
வரராஜ னென்னும்மாகவி வாய்ந்தநம் பாடுவார்பா
சரியாகத் தென்சொல்லாலோர் சரித்திர மாயியற்ற
கிரிராஜ னும்மஹேந்த்ர கிரிப்பெய ரீசாபோற்றி.

---

# அழகியநம்பியென்னும்
# ஸ்ரீ சுந்தரபரிபூர்ணேசன் றுதி.

## விருத்தம்.

ஆதியு மந்தமின்றி அகிலச ராசரத்தும்
ஜோதியாய் விளங்கியோங்கும் சுயம்பிர காசனுந்தன்
பாதமே கெதியென்றெண்ணி பக்திசெய் பாடுவாரின்
தீதிசேர் கதையியற்ற நின்றிரு வடிகள்போற்றி.

ஸாரஸதளஸமநயந என்ற வர்ணமெட்டு.

இராகம் கமாசு தாளம் ஆதி.

## பல்லவி.

சுந்தரபரி பூர்ண அர
விந்த ஸமசரண.

## அநுபல்லவி.

இந்திர னதிய ரிடுக்கம் தீர்த்துக்காத்திட
மந்தர கிரியையுன் மகிழ்வாய் முதுகெடுத்த



## சரணம்.

1

ஆரணப் பொருளான அகிலஜெகதீசவா
தாரண நலம் அருள்வாய் காவலர்புகழ்நாதனே
வாரண முறையிட வந்து கருணைவாட்டி
பூரண க்ருபைசெய்த புஷ்கர நாபஸ்ரீ சு.

2

ஆதியில் குசேல னென்னும் அந்தணனுடன்சாந்திபன்பால்
கோதறக் கல்வி பயின்ற கோபாலனேத்வாரகை
நீதியா யரசாளும் நினைக்காண வென்றுவந்த
வேதியன் வறுமையைப் போக்கி வள்ளலாய்ச்செய்த சு.

3

அம்பான விழிகள் வாய்ந்த ஆயர்குலமாதரை
நம் பாகக் கூடி களித்த கூவிளையனந்தபாதனே
நம்பாடு வாரிட நற்சரி தமுரைக்க
அம்போரு ஹநாபனே அடியேனுக் கருள்புரி சு.

---

## நந்தன் சரித்திரமானந்தம் என்ற வர்ணமெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

## கண்ணிகள்.

நம்பாடு வார்சரித்ர மின்பம் நவிலக்கேட்க
நாடா தகலும்மனத் துன்பம் ந.

1

வெம்பும் மனக்கோடங்க ளோடும்
வேதார்தன் கன்கை கூடும்
உம்பர்க ளுலகிநில் நாடும் உன்னின்பாயழக
நம்பியைத் தொழுதிடும் ந.

2

உண்டோ அவனைப்போல பக்தன்
உலகெங் கும்ப்ர சித்தன்
எண்டிசை போற்றுங்சுத்தன் ஞமனைவென்ற
சக்தன் ஜீவன்முக்தன் ந.

3

ஹரிபக்தர் களிலே முதலோன்
அவனி போற்று மேலோன்
பரிபக்குவ மானோன் பரந்தாமனைப்
பாடும் சத்குணசீலன் ந.

ஆதனூரிலொரு வேதியர்குலத்தில் என்றவர்ணமெட்டு.

இராகம் கல்யாணி—தாளம் ஆதி.

லாவணி.

1

ஜெம்புக பாஷாணச் சேரியில் ஜெனித்தவன்
ஜாதியில் பறையனவன்
அம்புஜ நாபனை அகத்துள் நிறுத்தியே
அல்லும் பகலும்துதிப்போன். ஜெ.

2

பூர்வ வினைப்பயனால் புவியில் புலையனும்
புண்ணியம் தவறாதவன்
சர்வ காலத்திலும் சஜ்ஜன சங்கத்தில்
சந்தோஷ மனமுள்ளவன். ஜெ.

3

காமக்ரோ தாதியைக் காற்றாய் பறக்கச்செய்து
கருத்தை ஹரிபால்வைத்தவன்
நேமத்தை வழுவாமல் நேசத் துப்புரவாக்கும்
நெறிகளைக் கைக்கொண்டவன். ஜெ.

4

நம்பிச் சாம்பானென்னும் நாம மடைந்தபுர
நம்பியைத் துதிப்பதினால்
நம்பாவோரெனும் நற்பெயரோங்கியே
நாரணன் புகழ்நவில்வோன். ஜெ.



5

அல்லும் பகலும்சொல் ஹரிஹரி யென்பதே
அவன்செய் யிபத்தொழிலாம்
கல்லும் உருகிடவே கரியமால துதியிகும்
கானமெக்கணமும் செய்வோன். ஜெ.

விருத்தம்.

வாரிதி சூழ் மூலகில் வளமிகும் ஜோதிநாடாள்
சேரது மிகவும்வாய்ந்த சிறப்புள சகுணவேந்தன்
காரது பொழிந்துசெங்கோல் கனமதா யோங்கிநல்ல
போரது பெறவென்றெண்ணி பெருமைசேர் மகம்செய்தானே.

இராகம் கேதாரம்—தாளம் மிஸ்ரசாப்பு.

ஜட்கா.

1

பூவுலகத்தில் புகழ்பெற்ற தாம்ஜோதி
புரத்தின் சிறப்பதைப் புலவர்களும்
நாவலர் கள்போற்றும் நாட்டுக்கெல்லாம்நடு
நாயக மாக விளங்கிடுமாம். பூ.

2

வர்ணமணாவிய மெத்தை மேடைகளும்
வளம்பெற்ற கோபுர மாயயமும்
வானுல கம்போல வன்மைவிளங்கியே
வானவரும்மதிக்க வாய்ந்ததுவாம். பூ.

3

நாரெண்டு வர்ணத்தார் இன்பமுடன் ஜகதீ
சன் விஷ்ணுவடியை இடையறதெண்ணி
பாரிலவர்க்குற்ற பண்டைய விதியைக்கை
சோர விடாமலே ருக்ஷிப்பாராம். பூ.

4

மல்லிகை முல்லை மருவாகுவி சண்பகம்
மாந்தர் மயங்கும் மனோரஞ்சிதம்
அல்லியும்தாமரை நீலோத் பலமுமோங்கி
அடர்ந்தன்ன தன்றுடலே ரோவாமும். பூ.

5

பாக்குடன் தெங்கும் பலாமாவாழை
பழங்கள் புஷ்பமோங்கும் பலவிருக்ஷமும்சி
லாக்கியமாகிய ஸ்ருங்காரச் சோலையும்
வாக்குமனதிற்கெட்டா வளம்பெற்றதாம். பூ.

இராகம் கல்யாணி—தாளம் சாப்பு.

பல்லவி.

யாகம்செய் தானேநோக்தன் ஜோதிடரிலை
நாகரீகமா யான்வோன்

அநுபல்லவி.

யாகம்செய்தான் ப்ரம்ம யோகியர்போஷன்சி
னேகம்பெற்றுமனதின் சோகம்தீர்த் தய்யனே. யா.

சரணம்.

1

ஸோமசர் மாவென்பவன் மறைகள்நான்கும்
சோராமல் கற்றுணர்ந் தோன்
நாமகளருள்பெற்ற கலைமிகும் விப்ரனை
நல்மனதாகப்பு ரோஹித னுக்கொண்டு. யா.

2

அன்னதானம் முதலாய் கலைகள்புகல்
அறங்கள் நாலெட்டும் செய்தும்
பின்னமின்றி ப்ராம்ம ணர்க்குப்பொருளும்நல்கி
பீடுயர் வேர்தர்க்கும் பிரியமாய்ப்பரிசித்து. யா.

3

ஆகமங் களுமுணர்ந்த அந்தணர்க்குந்து
ஆரணங் கலை சோதிக்க
போஜசயனன் தானைப் போற்றித்தன் சோரிக்கை
பொருந்தமாய் நிறைவேறும் பொருட்டாகவேசத்ர. யா.

## போஜனச் சிறப்பு.

இராகம் நாதநாமக்கிரியை—தாளம் ஆதி.

போஜன சிறப்பைக்கேளும்
மாஜெனங்களே



1. போஜனசிறப்பின் பொருளைப்புகல, ஈஜெகத்தோர்க்கது எளிதலவரிதாம், ராஜர்கள்புஜிக்கும்தே ஜோமயமாகிய, பாஜியென்றுரைத்திடும் பற்பலகறிவகை, அவரை பீர்க்கங்காய் புடல்கொத்தவரை, வெண்டைபூசினிசாம் பற்பூசினியும், யோகியருந்தும் பாகற்சுண்டை, ஆகமமுரைக்குமா தண்டைகோவையும், புல்லாகுதியேகேள் கல்வகெல்வியரை கெல்விக்காயும், வல்லபமானபீ லாமாவாழை, சொல்லகீர்சுறக்கும் நல்லசேனையும், சொல்லொணு பற்பல வள்ளிகிழங்கும்,

தொல்லுலகினிலுள தொகைமிகும்கறிவகை
வல்லயரான்வர் வண்மைசேர்ப்பதமுடன்
நல்லவிதமாய்கள பாகமாய்ச்செய்து
நல்லமனமுடனே கவியுண்பித்த. போ.

2. பலவிதப்பொடித்துவல் கலமிகுசாம்பார், விலையுளரஸமுடனிலகுமோர்க்கடியும், பலெபலெனும்பச் சடிசிச்சிடியும், குவலயம்புகழ்கோ ஸம்பரிபலதும், இலைக்கழகானபிட் லைசெட்னிகளும், எலுமிச்சைகாரத்தைமாவுகினாவினுல் ஐலுநியிலுண்பதர்க்காணவூறுகாய், என்னென்றுசொல்லுவேன் வர்ணிப்பதரிதாம், இன்னமுமுரைப்பேன் கன்னயமாய்க்கேன், கன்னியர்சிறந்தன கோஸகாட்டின், உன்னிதசமையலும் ஊர்ஜிதமாக, மன்னவன்சொற்படி மாகுியாய்ச்செய்து, இக்ககரோர்களும் இதுகலதென்று, சொன்னயமிகும்கறி வகையையும் சொல்வேன், பின்னமிலாதஒலன்காளன் பீடுயாவியல்கூட்டுக்கறிகளும், எரிசேரிபுளிசேரி எழிலென்னுக்கறியும், கொஞ்சிகொஞ்சிவரும் அஞ்சகமே கேள், இஞ்சிதயிருபுளி யிஞ்சியும்பலவிதம், வஞ்சியேவேப்பிலை கட்டி பலேவேஷாக், வரிக்கைசக்கையும் பெருத்தமாம்பழம், சிங்கன்பூவன் சிறந்தஞாலிப்பூவன், பங்கமிலாப்பா லையன்கோடன்பழம், அடையுடன்கடலை பருப்புப்ரதமனும், இடித்துப்பிழிந்தப்பா யஸம்செய்பாயஸம், பிடியிண்டையேபழ ப்ரதமன்பால்பாயஸம், புடவியெலாம்விலை பொரும்மடமானே, அப்பமும்வடையென் ளுருண்டையுமதிரஸம், நுப்பமாய் சக்கை சேனைகாயினுல், உப்பேரிவகை சக்கரைபெரட்டி, பப்படவகைகள் பற்பலவிதமாய், செப்பமாய்க்கோல சமையல்செய்வித்தும், இப்பதிபாகத் துடனிருவகையும்,

ஒப்புயர்வின்றியே நுழுங்காய்செய்வித்து
நல்லொருவர்களும் ஓஹோபேஷ்பேஷ்
அப்பப்பாவிருந் தற்புதமென் றனம்
ஆனந்தமாயுண்டு அனைவரும்புகழும். போ.

3. சுருமாகுஞ்சா மோஹனலாடும், காதலாமிகே பாயஸத்துடனே, அறிவுளோர்செய்த ஸாமிகெபேணியும், பதர்பேணி லோ மாவிபோளியும்,

லட்டுஜிலேபி ஜாங்கிரிஹல்வா, திட்டமாய்மைசூர் பாகுபால்கோவா, வடையதிரஸத்துடன் முருக்குதேன்குழல், காமுரவென்னும் காராபூந்தி, சிறியவர்க்குரிய ஓமப்பொடியும், சிறுவடைபெருவடை தாரவடையும், தயிர்வடைரஸவடை தீன்தான்மேலெனும், உள்ளிவாழைப்பூ உயர்ந்தபக்கோடா, மெல்லியேபுளிதயி ரென்னுடன்தேங்காய், நல்லஎலுமிச்சைசாதங்கள், வாங்கிகேசரிபுக ழோங்கும்பகாளா, பாத்துநன்றுசியதைப் பார்த்துளமகிழ்ந்து,

விண்ணோர்க்கரிய வெகுவிதஸாமான்
விமரிசையென் றுமெ விண்டோவால்கொட்டி
உள்ளமகிழ்வதா யுண்டநல்விபவத்தின்
உன்னிதம்வெங்கட ராயனுரைக்கும் போ

## விருத்தம்.

1

மகத்தினை செய்வித்தோங்கும் மனைசயவன் முன்னாட்செய்த
அகத்தின்வல் வினையிறேலே அழிவது மயங்கியிஷ்டி
இகத்தினில் மந்த்ரம்செய்கை இரண்டிலும் தவறாய்ச்செய்த
சகத்தினில் முனிந்துதேவர் மாளவே சபித்திட்டாரே.

2

அமரரின் சாபத்தாலே அந்தணன் ஸோமசர்மா
சிரமும் குனியாவண்ணம் நிகழ்ந்தொரு குலைநோயால்
குமரியே அழுதயர்ந்து குணமுறா தழன்றுமாண்டு
அமரர்சொல் போலப்ரம்ம அரக்கனா யுதித்திட்டானே.

## விருத்தம்.

1

இஷ்டியும் மறையோன்செய்த இருவகை லோபத்தாலே
நஷ்டம தடையவேந்த னாகிய சுகுணவானன்
கஷ்டம தெய்திஆயுங் காலமுந் தீர்ந்திறந்தன்
பஷ்டமாய்ப் பறையனாகப் பாரிசைப் பிறந்திட்டானே.

2

சண்டாள குலத்தில்நம்பிச் சாம்பானா யுதித்தவேந்தன்
திண்டோள னழகநம்பித் திருவடி தனையேபோற்றி
கண்டோர்கள் புகழக்காணம் கைசிகப் பண்ணால்பாடி
உண்டான பலனால்நம்பா டுவனெனப் பேர்பெற்றானே.



சுரையோ படர்ந்திருக்கும் என்ற வர்ணமெட்டு.

இராகம் புன்னாகவராளி தாளம் சாப்பு.

## நொண்டிச் சிந்து.

சேரியின் சிறைக்கேளும் பறச்
சேரியின்விமரிசை யைப்புகல்வேன் (சே

சுரையும் படர்ந்திருக்கும்-குடிசைக்-குற்றச்சுவர்சாணும் முழமுள்ளதாம், கரையான் அரிப்பதினால்-ஓலைக்-காற்றிற்பறக்கும்சாற் றுடியைப் போல், தோலுறும் தோணிகளும்-எங்கும்-தோரணம் மாமிஸக்கண்டங்களாம், காலபக்கத்திலும்-நாய்கள்-நாடிக்குலைத்துவெள் ளெல்லேக்கவும், நத்தை நண்டுக்களையும்-சுட்ட-நாற்றத்தின் மோப்பத்தை நாடிவானில், சுற்றும் பருந்துகளும்-சூழ்ந்து-எத்திக்கொண்டேகும் இலைச்சிகளை, ஆபாலவிருத்தரென் றுச்-சொல்லும்-ஆணும்பெண்கள்பால ரானந்தமாய், பாபங்கள் எண்ணுமலே-பறச்-சாதிக்கேற்றபசுக் கொன்றுதின்று, கள்ளுண்டுக்கெக்கலித்தும்-ஓசைக்-கனமாய்முழங்கும் தமுக்கடித்தும், பன்னுகன் பாடிக்கொண்டும்-அவர்-பாரில்சாம்ப குலம் மேலென்பாராம். சே.

## விருத்தம்.

பறையனா யுதித்தவேந்தன் பற்றுமுன் ஜென்மவாடை
நெறியது வழுவாவண்ணம் நேர்மைசேர் பதத்தைநாடி
பரிவுடன் விஷ்ணுநாமம் பாடியே காலம்போக்கி
பறையரில் சோரனாகி பக்தனாய் விளங்கினானே.

பேதை நெஞ்சேயிந்த ஜென்மமெடுத்துநான் என்ற வர்ணமெட்டு.

இராகம் கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி.

ஐயஸ்ரீ சுந்தர பரிபூர்ண சுவாமிநான்
அடைந்த ஜென்மம் போதும்.

அநு பல்லவி.

மெய்யனே நான்வேண்டேன் மேதினிவாட்டமை ஐ.
துய்யனே துயர் தீர்ப்பாயே

சரணம்.

1

புவியிலுதித்துப்பூவை மண்பொன்னி னுவலால்
பூண்டவல் லல்கள் போதும்
பவஸா கரம்பூட்டப் பாவியாமெனக்குந்தன்
பதமல ரளித்துக் காப்பாய் ஐ.

2

எல்லையில் லாதப்பொல்லா இடருற்றேனெந்தையே
வழொன் றெழுத் தானவா
தொல்லைக ளகற்றியுன் தொண்டரொடென்னைச்சேர்ப்பாய்
தொல்லுல களந்தவனே ஐ.

3

சண்டாள னும்நம்பிச் சாம்பானும் அடியேனை
சர்வவ்யா பியாம் விஷ்ணுவே
அண்டாமல் அகலென்று [illegible]றவது ஞாயமோ
அபயம் அ[illegible].

முங்கிமுழுகுகிற பெண்ணே என்ற வர்ணமெட்டு.

இராகம் தன்யாசி தாளம் ஆதி.

பல்லவி.

சுந்தர பரிபூர்ண சுவாமியின் தரிசனம்
சுபங்களை ஈந்திடுமே.

அநு பல்லவி.

பந்த பாசத்துழலும் பாமர ராகிலும்
வந்தனை செய்தால்நல்ல வரங்க ளளித்துக்காக்கும்

சரணம்.

1

விணாய் வாணாளைப்போக்கேல் விஷ்ணு வழகநம்பி
விரும்புவ தெல்லாம் கொடுப்போன்
தூணில்னின் றுதித்துப்ப்ரஹ்ல லாதனைக் காத்தவன்
துணையின்றி வனம்சென்ற துருவன் றுயர் தீர்த்தவன்.



2

ஆதிமூலமே யென்ற அபய மிட்டக்கரியின்
அல்ல லகற்றிக் காத்தவன்
பேதைப் பாஞ்சாலிபண்டு பெருந்துரா லிட்டுக்கூவ
ஆதரவ் கூர்ந்தாடை அளித்தவன் மானங்காத்தோன்

3

பறையன் மறையோனென்னும் பாரபக்ஷங்கள் எண்ணு
பக்தருள் ளத்தினில் வாஸன்
பரம பாதகனென அறையின ஜலக்கும்தன்
பரம பதத்தையீந்த பக்த வத்ஸலனென

விருத்தம்.

1

நம்பாடு வான்தன்னுள்ளில் காரணன் [illegible]த்தைநாட்டி
அம்புவி மாயாபாசம் அகலவே அறிவாலோட்டி
நம்பலாய்க் கேட்போர்க்கீசன் குணமெனு மமுதையூட்டி
நம்பிடிய துணையென்றெண்ணி கல்யாத்ரை செய்திட்டானே.

2

இவ்விதம் பாடுவான்தன் இதயத்தி லின்பம்மேவி
செவ்வையாய் திவ்யதேசம் சென்றுமே யாத்ரையாக
ஒவ்வொரு க்ஷேத்திரத்தும் ஓங்கும்ஸ்ரீ ஹரியின்மாக்ஷி
அவ்வவ்வி டத்திற்பாடி ஆனந்த மெய்தினானே.

3

ஆண்டுகள் முன்னூன்காக அவனியாத் திரைசெய் துள்ளில்
தூண்டிடும் பக்தியாலே தூய்மைசேர் பாடுவான்தன்
ஆண்டவ னும்குறுங்கை அழகிய நம்பிப்பாதம்
வேண்டிதன் ஜெனனபூமி வேகத்தி லெய்தினானே.

4

எய்திய நம்பிச்சாம்பான் எம்பிரான் நம்பிதன்னை
மெய்மைசே ரன்பினாலே மென்மேலும் புகழ்ந்துமேதன்
வைகநை சிரசில்கூப்பிக் கரியமால் காக்ஷிகாண
மெய்மனம் வருந்தியுலைவாய் மெழுகென உருகுவானே.

மார்கழிமாதம் திருவாதிரைநாள் என்ற வர்ணமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி.

பல்லவி.

கார்த்திகை மாசம் சுழுகொண்ணு ஏகாதசி
கனமிகும் வ்ரத தினத்தில்.

அநுபல்லவி.

பார்த்து வடிவழக நம்பியை தரிசித்து
பரகெதி பெற வேண்டுமே.

சரணம்.

1

பறையன் ஆனதினால்நான் பார்ப்பார்கள் பக்கம்சென்றால்
பாவங்கள் விளைக்குமே
அருகில் போகாமலே ஆலயத் தெதிர்நின்று
ஐயனைத் துதி மனமே. சர.

2

காலில் நகம்முளைத்த நாள்முத லாகவெந்தன்
கவலையொழிய வில்லையே
மாலின் திருநாமத்தை மறவாம லெக்கணமும்
மகிழ்வுடன் புகழ் வாயே. சர.

3

பாகவதர்கள் போஷன் பக்த ரக்ஷகன் தீன
பந்துவாம் பிருதுடை யோன்
வேகமோடிச் சென்று வைஷ்ணவ நம்பித்தாளில்
வீழ்ந்துப் பணிவாய் உடலே. ச.

விருத்தம்.

ஆண்டொரு பன்னிரண்டும் அழகிய திவ்யதேசம்
வேண்டிய தலங்கள்கண்டு வேகமாய்க் குறுங்கைசேர்ந்து
தேண்டுள பனையன்பாகத் தெரிசிக்கப் போகுங்காலை
ஆண்டவன் பரிசைபக்தன் அரக்கன்கை லகப்பட்டானே.



இராகம் கேதாரம். தானம் சாப்பு.

கட்கா.

1

ஸோம சர்மாவென்னும் வேதியன் கலைகளில்
சொல்லுவதெல்லா முணர்ந்திருந்தும்
நேமத்தை விட்டதால் நிகமபா ரங்கதன்
பூமியி லுதித்தான்புல் லரக்கனாக.

2

மாஹேந்த்ர மென்னும் மலையடி வாரத்தில்
ஆளியும் மிருகங்கள் அடர்ந்தகாட்டில்
பாஹு பலத்தோடு பாவிம்சை செய்துமாண்
சாஹஸத் துடனேங்கி சஞ்சரித்தான்.

3

நம்பாடுவானென்னும் நல்மனத்தோனழக
நம்பியின் சேவையை நாடிச் செல்ல
வெம்பியப் பசியா லுழல்ப்ப்ரம ராக்கதன்
பம்பியே பக்தனை பற்றிக்கொண் டான்.

4

பிடிபட்ட பக்தன்தன் ப்ராணனுக் கஞ்சாமல்
தடைபட்டுத் தரிசனம் தவறும் என்று
விடவிடத் துடலெல்லாம் வியர்த்துள்ளம் வருந்தியே
கொடிய வரக்கன்பால் கூறலா னான்.

5

ஆண்டவ னேயிந்த அடியேனை விடும்சக்ரம்
பூண்டவ னடிகளைப் புகழ்ந்தேற்ற வே
வேண்டி வந்தேனென்னை வேதனை செய்யாமல்
ஆண்டவ னருள்பெற அனுப்புமை யா.

விருத்தம்.

அரக்கனும் பாடுவானும் அவரவர் விதிவசத்தால்
நெருக்கமா யடர்ந்தகாட்டில் நேரிட்ட வினையாலவர்கள்
உருக்கமும் கடுமையாக உரைத்ததே யிரண்டுபேரும்
சுருக்கமும் புரிந்தவனையித் தமிழில்நா னறைகுவேனே.

## மார்க்கத்தில் கண்டகனி என்ற வர்ணமெட்டு.

இராகம் அடாணா தாளம் ரூபகம்,

கண்ணிகள்

1

ஆரடா காளையிவ் வழிவந்தாய் நீயெனக்
காகார மாவதற்காய் நேரடா கேள்
நேரடா கேளெந்தன் நெஞ்சம் மகிழ்வாக
நினைத்தின் றுப் பசிதணி வேன்.

2

ஆண்டே யென்னைத்தின்ன லாகாது ஐயுன்
அடிமலர் களில்விழுவேன் தேன்துளபம்
தேன்துள பம்பூண்ட திருமாலை தரிசிக்க
தேவனே நான்செல்ப வன்.

3

மானிடப் புழுவேயிம் மிரட்டென்பால் செல்லுமோ
மறுத்துன்னை விடுவேனோடா தேனடையை
தேனடை யைப்போலப் பிழிந்துந்தன் தேகத்தை
தின்றெந்தன் பசியைத் தீர்ப்பேன்.

4

நானுனக் கெதிரியோ நல்லன்ப னேயுந்தன்
நளினப் பதம்பணிந்தேன் தீனன்மீதில்
தீனன் மீதில் தயை கூர்ந்தனுப் பும்ஐயா
திருமாலின் சேவை செய்ய.

5

திருமால் திருமாலென்னும் திருட்டுப்பார் வையும்சொல்லும்
திண்ணமாய் நானேற்றிடேன் பொரிமாவைப்போல்
பொரிமாவைப் போலுன்னைப் பொடித்துண்டை செய்துண்டு
போக்குவே னென்பசி யை.

6

என்ஜீவ பயத்தினால் இயம்பும் வார்த்தைகளல்ல
ஏமாற்றும் செய்கையல்ல தன்றுளபன்
தன்றுள பன்றிருத் தாட்பணிந் தடியவன்
தவறாதுன் னிடம்வரு வேன்.



7

மானிடர் வாக்காலென் மதிமயங் கேனென்னை
மடையனென் றெண்ணினையோ! நானுடனே
நானுட னேயுன்னைத் தின்றெந்தன் பசிபோக்க
நற்றரு ணமயிது வே.

8

சத்தியம் தவறிடேன் சாற்றேன்பொய் வாக்கைநான்
சர்வ வ்யாபியாகிய அத்தன் பாத
அத்தன் பாதத்தாணை ஹரியை சேவித்திங்கு
அரைக்ஷணத் தில்வரு வேன்,

9

விஷ்ணுவைக் கள்ளனாய் விரித்துரைக்கும் சேதி
விண்மண்ணும் அறியுமடா உஷ்ணமாக
உஷ்ணமாக வெந்தலன்மூனி யச்செய்யேல்
உன்னைநான் விடுவதில் லை.

10

ஏகேவென் றென்னைநீ ஏங்கச்செய் திடவேண்டாம்
என்வார்த்தை யொன்றைக்கேட்பாய் ஏகாதசி
ஏகாதசி வ்ரத சாக்ஷியாய் வருகின்றேன்
என்னைநீ யனுப்பும் ஐயா.

11

இவ்விதம் பாடுவான் ஏகா தசிசாக்ஷி
இட்டதின் பொருளுணர அவ்வமயம்
அவ்வமயம் ப்ரம்ம ராக்கதன் வினவுவான்
அவன்பேரூர் வ்ரதபல னும்.

### விருத்தம்.

ஆவலாய் நம்பியோங்கும் ஆலய மேகவென்னும்
கேவல மானிடநான் கேட்பதற் கிசைந்துநீயும்
மேவிடு பெரும்பேறும் மேலெனு மேகாதசியின்
பாவம் நானறியசிராய்ப் பரிவுட னுரைகுவாயே

விருத்தம்.

அரக்சனுலரையக்கேட்ட அடியவன் மனத்துளென்றும்
வசிக்கும்என் பக்தியோங்கி வளர்வதின் வண்மையாலே
உருக்கமாய் நம்பியைத்தன் உள்ளத்தில் துதித்துமேயவ்
விருக்கும்போல் வாங்கற்ற இன்சொலா வியம்புவானே.

இராகம் மோஹனம் தாளம் ஆதி

கொண்டிச் சிந்து.

ஆண்டோன் சொல்லக்கேளும் — ஆற்றல்மலிந்த — அரக்கசிரோமணி அன்புடனே, கரியமாலுந்தியந்தோன் — படைப்பில் — காசினியிலுயர் திருக்குறுங்குடிவாழ், உரகசயனனழக — நம்பியின் — உபயசரணமெந்தன் சிரமணிந்து, பரிவுடன் நான்புகலும்-வாக்கை-பக்ஷமதாய்க் கேட்டுநல்ல பலன் பெறுவாய், இருவினைப் பிணியறுக்கும்-ஈசன்பதம்-இகபரஸாதக மீந்திடுமே. ஆ.

ஜெம்புக பாஷாணம்-என்னும்பறச்-சேரிதனிலுதித்தேன்ஜா தியில்பறையன், அம்புதி சயனன் தாள்-அநுதினமும்-அன்புடனேபோற்றுமிந்த அடியேனை, நாம்பாடுவானென்று-இந்த-நாட்டிலுப்பல ருரைப்பதைக் கேட்டிருக்கின்றேனு வாட்டமுறும் பவரோகம்-விலகிவுய்ய-வையமிசை தீர்த்தயாத்திரை சென்றுழேலவந்தேன். ஆ.

ஏகாதசிபலனை — ஏழைப்பறையன் — எடுத்துரைத்திடவெந்தன் தரமாமோ, நாகேந்திரனுடைய-ஆதிசேடன்-நாவுகளாயிரமும் பெற்றிருந்தாலும், ஆஹா வென் றாச்சரியப்-படுவானன்றி-அதிந்துரைத்திட அவ னுக்குமரிதாம், சோகாந்த காரம்யென்னும்-மனத்திணிருள்-சொல்வாமலகன்றருள் ஜோதி விளங்கும். ஆ.

தசமியிலொருவேளை-புக்தம்-தானெடுத்தேகாதசி ராப்பகலும், பசியதை யெண்ணா[illegible]-பானமும் செய்யாமலுபவாஸமதாய், குசுமநாபன்குண [illegible]தனங்கள்-குறைவின்றியேசெய்து மறுதினத்தில், அசனமுட்கொள்வதுதான்-பாரணை-அதிகாலையிலொரு வேளைதானையா. ஆ.

பாரணை முடிந்தபின்பு-வாதயிழைப்போர்-படுத்தாக்கம்கொண்டால் பலனழியும், காரணன் பதத்தில்மனம்-நாடிப்போற்ற-நான்குவகைமுக்தி பெற்றுநமனைவெல்வார், கோரபாதகங்களென்னும்-கொலைபுலை-கொடிய களவுமுபதைபாதகங்களும், [illegible]பொறும்-[illegible]குலையால்-நித்யானந்தமுண்டாகும் நிசமவாக்காம். ஆ.



இராகம் புன்னாகவராளி தாளம் சாப்பு.

கப்பல்.

ஏலேலோ சுந்தர பரிபூர்ணனே கோவிந்தா
எங்குந்தூர்வ வியாபகனே
வேலைதுயில் மாதவனே கோவிந்தா
வெந்துயர்தீர்த் தாள்பவனே
நீலமேக ஶ்யாமளனே கோவிந்தா
நிலமும்விண்ணை யளந்தவனே
பாலனம்செய் பாத்ரவனே அடிமையுந்தன்
பாதமதை நம்பினேனே.

முடுகு.

1. என்றுசுந்தரபரி பூர்ணேசனைத்தான் — ஏகாந்தயாமபுள்ளி லேத்தித்துதித்து அன்றலர்ந்திட்டசெந் தாமரைகீழ்க்கு — அம்பானபக்திரஸம் அகத்துள் நிறைந்து, என்றுமேகுறையாமல் மென்மேல்மலிந்து — எழிலாகவே விளங்கும் இனியமுகமலர்வால், தன்மானத்திற்கு றுவும் தயங்காமல் மகிழ்வாய் — தன்னையப்ரம்மமாகக் கதன்நம்புதற்கு. பின்முறை ஸ்ரீஹரியின் பாதம்பணிந்து — பதினான்குசபதங்கள் செய்குவான்பரிவாய், ஆண்டவனே யென்வாக்கை அன்புடன்கேளும் — அழகநம்பியின்பாத மலர்சாக்ஷியாக வேண்டுநல்லுறுதிவாக் குகள்சத்யமாயும் — வெறுப்பின்றிமனமகிழ் வாகப் புகல்வேன், பாண்டவசகாயஸ்ரீ அழகநம்பியின்சீர் — பாதமலர்தரிசித்து அதிவேகமாய்நான், ஆண்டவனேவந்தெய்தி உன்பசிக்கேந்தன் — ஆக்கையைத்தந்திடத் தவறுவேனாகில், நீண்டகடல்சூழ் வனைந்தோங்குமிந்த — நிலயிசையுள்ளோர்க்கு ஆகமங்களிலே, மூரசொலிப்போலுரைத்திடும் பாபமேற்க — முழுமனதாய்நானுடன் பட்டுநாகடவேன்.

ஒவ்வொரு விதப்பாப செயல்களையு மென்றுள்
ஓங்குமஸ்ரீ நம்பியின் பாதசாக்ஷியுமாய்
செவ்வையாய் விவரித்து செப்புவே னென்று
ஜெகதீச னடிபோற்றி செங்கைகுவித் தானும். எ.

2. சர்வகாரணமாக வோங்குமசத்யத்தின் — சார்பதனைவிட்டவனுக் குள்ளநரகடைவேன், (1) தர்விஷயகாமமோ ஹாவேசமுண்டு — தாயத்[illegible] [illegible]ப்பபராதா கமனம்செய்வோர்கள், சர்வகாலத்திலும் வசைவாக்கை [illegible] பெற்று — சார்த்திம்பொல்லாத நரகத்தையடைவேன். (2) பெருமலில் [illegible] [illegible]பணக்கண்ணில் — பெருமையாய்தனக்கொள்ளும் [illegible] மற்றவர்க்

கொன்றும், சேரிலாவிதமாக செய்வித்துண்போர்க்கு—நேரிடும்பயபாகத்தையும்அடைவேன் (3) மறையோர்க்குவிதிபோல புவிதானமீந்து—மறுபடியும் கவர்வோர்க ளெய்தும்நரகடைவேன், (4) சுந்தரியிருந்தவொரு கன்னிகையைமணந்து—சாதங்களனுபவித் தவளைவெறுத்து, இந்தமண்ணுலகத்தில் விந்தைவாக்கைநீவோர்—எய்திடும்நரகத்தை நானடைந்துழல்வேன், (5) அமாவாசையாம்புண்ய பிதூர்தினங்களிலே—ஆகமம்போலவே பிதூர்கர்மம்செய்தும், அரியதாகியஸ்ராத்த போஜனம்செய்தும்—அன்றிரவில் மகிழ்வாக வேயன்னமுண்டும், அரிவைஸம்போகத்தைச் செய்வோர்களேற்கும்—அதிகொடியதானநர கங்களையுமடைவேன், (6) தரணியில் தன்மகளை யொருவனுக்கன்பாய்த்—தானுறுதியாய்க்கன்னி காதானம்செய்து, தருவதாய்ச்சொல்லிபின் இல்லையென்றதையும்—தர்மஹீனர்களுக்குரியநரகடைவேன், (7) ஷஷ்டியஷ்டமியமா வாசைதினத்தும்—சதுர்த்தசித்துவாதசி யானநாட்களிலும், சிஷ்டவாச்சாரப் படிக்குளிக்காமல்—சித்தமகிழ்ந்துண்போருக் குற்றநரகடைவேன், (8) பெருத்த காமாந்தகாரத்தின்வசமாகி—பேருதவிசெய்தோன் மணந்தமனைவியையும், உரித்த மித்திரனுடைய மனைவியையும்புணரும்—உன்மத்தர்கள்படும் நரகங்களடைவேன், (9) அவனியில்எவனொருவன் குருபத்னிதனையும்—அகிலத்ததயராசாளும் வேந்தின்ராணியையும், அச்சமில்லாமல்தன் ஹஸ்தத்தால் தொட்டோன்—அடைந்துழலும்மாண்கொடிய நரகங்களடைவேன், (10) ஆதியில்ஒருவனுக் கொருவஸ்துவைத்தான்—அளிப்பதாய்வாக்குறுதி செய்துபின்னியா, அரும்பாவியெனும்பேரை யேற்றுமேதினியும்—அறிவிலார்கள்சாரும் நரகத்தையடைவேன், (11) மேதினியிலொருவனிரு பெண்களைமணந்து—மேன்மையாயொருவளை நேசித்துமேதான், ஆதரவிலாமல்மற் றவளைவிலக்கும்—அதிதுஷ்டனுக்குரிய நரகத்தையடைவேன், (12) அதிகொடியப்ரம்மஹத் யாதிபாதகமும்—அக்கிரமத்துக்குரிய மதுபானம்செய்தும், அன்னியர்கள்பொருளை அபஹரணம்செய்தும்—ஆச்சார்யதூஷணம் செய்துவருவோனும், இந்நளத்தினிவர் களுக்குதவியாக—இருப்போர்களும் மெய்தும் நரகங்களடைவேன், (13) இப்பெரிய பாபங்க ளுக்கும்மேலான—இயம்பொணுமாபாவம் இனியொன்றுகேட்பாய், இப்புவியில்மறையாதி கலைகளியம்பும்—இனியகீர்வாணத்திலே யொருசுலோகம்.

செப்பமாய்ச் சொல்லியது னுக்குரிய பொருளும்
செப்புவே னென்றுநம் பாடுவோன் சிராய்
முப்புர மெரித்தோனும் முனிரியோ னேற்றும்
முதல்வனடி யையும்போற்றி மொழியமுயன் றேனும்.



சுலோகம்.

நாராயணோ மதாங்யேஸு தேவைஸ்ஸர்வ்யம் கரோதியஹ
தஸ்யபாபே நவிப்யேயம் யத்யஹம்நா கமேபுனஹ.

இதன்பொருள்.

3. இவ்வரியஸ்லோகத்தி னுக்குரியபொருளை—இச்சமயமுந்தனுக் கியம்புவேன்சிராய், செவ்வையாகச்செவி கொடுத்துள்ளுவந்து—செப்புவதைக் கவனமாய்க் கேளென்றுரைப்பான், சர்வஸ்மாத்பரனும் சர்வாந்தர்யாமி—யாய்சர்வகர்மசமா ராத்யாயனுகி, முனிவர்களாதிமு முக்ஷுக்களும் தம்—முள்ளத்திலெப்போதும் செயுமுபாஸ்யனுமாய், சாக்ஷாத்மோக்ஷப்பிரத னுகிவேதங்கள்—சாற்றிப்புகழ்முக்த ப்ராப்யனும்ஆகி, பார்விண்ணும் பாதாள மென்பதையுஞ்சார்ந்த—பதினுன்குபுவனத்தை யுந்தன்வயிற்றில், சேர்மையாய்வைத்துகாப் பாற்றிடும்ஸ்ரீமந்—நாராயணன்ஆன தேவனுக் கினையாய், சார்வகாலமும்கர்ம வாஸனையராய்—சாகரம்சூழுலகில் மறுதெய்வங்களையிப், பார்ஸ்கைசையிலறியாமல் பூஜித்துபக்தி—பண்ணியேபித்யசம் வாரியாயுலகில், சீர்வழியை தாமாக விட்டுழன்றலையும்—சிற்றறிவுளோர்களுக் குற்றநரகடைவேன், இந்தவிதமாகயீ ரேழுசத்தியமும்—ஈசன் பாதந்தாளை இயம்பினேனுன்பால்,

எந்தன்பால் க்ருபைகூர்ந் தனுப்பினல் வேகம்
ஏகிநம் பியின்பாத மேத்தித் துதித்து
உந்தன்பணி தீர்க்கவே உடனேயிங் குற்றேன்
உடலையளிப் பேனென்று உறுதிசொன் னேனும்

விருத்தம்.

அடியவ னுரையைக்கேட்டு அரக்கனுள் ளன்புகூர்ந்து
ஆடியதாய்ச் சென்றுநீயுன் றுளபமால் பாதம்போற்றி
கொடியதில் வருவயயுந்தன் சோன்பதை வீனுக்காமல்
மடியநீ பயந்தொழித்தால் மன்னனில்நா னுனைவிடேனே.

விருத்தம்.

அரக்கனுவ் விடையையேற்று அகமிக மகிழ்ந்துபக்தன்
உருக்கமாய் ஹரியைப்போற்றி உடையவா ஆழ்வாயென்று
செல்வா பெற்றிக்கூவி ஸ்ரீதரா அபயமென்று
சருக்கின மரம்போல்வீழ்ந்து நாதனைப் பணிந்திட்டானே

## விருத்தம்.

உலகதனில் மகிழ்வுற்றோங்கி அறிவினை வாய்படைத்து
செகமிசைப் பாவொளுப் செப்புஸ்ரீ ஹரிபக்தன்செல்
புகழ்மிகும் குறுங்கையென்னும் புண்யக்ஷேத் திரத்தின்மாக்ஷி
சுகமதாயத் தமிழிற்சிந்து சுருக்கமாய்ப் புகலுவேனே.

சுரைமேயா படர்ந்திருக்கும் என்ற வர்ணமெட்டு.

இராகம்—புன்னாகவராளி.

### நொண்டிச் சிந்து.

1. திருக்குறுங் குடிச்சிறப்பை—யிசைத்—திதிக்கும்தமிழிலேவர் சிந்துரைப்பேன், அருக்கனும் சோமனுடன்—வளூ—ஆழிகள்சூழ்ந்தன்ன வையகத்தில், சிறக்குந்தென் பாண்டிநாட்—டில்வளம—சேர்திருநெல்வேலி ஜில்லாப்புகழ், வரிக்கும்க்ஷேத்-திரத்தின்சிறப்பினை—வழுத்துவேனொரு விதம் வண்மைபாக, பதினெண்பு ராணங்களில்—நன்றய்ப்—பகரும் வராஹப்புராணத்தினில், திதியாய் விளங்கும்பதி—பதியினை—திகழ்க்கும் வைகாவக்ஷேத் திரமென்றும்நல், அதிசேர் வாமனருடி—யாம்மனத்—துன்பமகற்றும் குறுங்குடியாம், அதிகப்புகழ்மலி—கஷிண—பதிரிகாஸ்ரமம்திருக் குறுங்குடியாம், இக்கவிதப்பெயர்கள்—இருக்கும்—இனிதாய்ப் பெற் றோங்கிடும்க்ஷேத்ரச்சீரை, எந்தைஸ்ரீ—அழகியநம்பியின்—எழில்கழல் களைத்துதித் தியம்பிடுவேன் தி.

2. மாஹேந்த்ர வெற்பிலுக்—பவித்ததி—மாக்ஷிசேர்சிந்துநதிக்கரையில், ஆறாறா—அத்புதக்ஷேத்ரமென்—றகிலத்தோரெல்லாம் புகழவாய்ந்தி தேஜஸியென் றேத்திடும்—மாந்தர்க்குத்—தேவையானவர மீந்துக்காக்கும் ஆஸ்ரியனை—யோங்கும்ஸ்ரீ—அழகியநம்பியின் கருணையினால், பாலாழியைநிகர்த்—தப்பல—பண்புசேர்நதிகளின்பெருக்கால், காவின்வழிப்பெரு—கும்ஜலம்—கணக்கில்அடங்காத கஞ்சைகளில், மேலாகப் பாய்வதினால்—செந்நெல்—மென்மேலுமோங்கி வளர்வயல்கள். காலபக் கத்திலுமே—சூழ்ந்து—நலமாகவிளங்கும்பிங்கசரத்திலே, நறுமணம் கமழும்பற்—பலவித-நந்தவனங்கள்பூஞ் சோலைகளும், சிறப்பாய் வாலைத்தாவி—யோங்கிய—சிறந்தநற்கமுகும்தென் னஞ்சோலையும், பெருமைசேர் மாபிலா—வாழைகள்—பெருகியுயர்ந்தடர் சோலைகளும், அதியான ராகிய—நாவலர்—அறைவுதற்கேற்பச்செழித்தோங்கியும், விண்ணை யளாவி—வுயர்ந்துள்ள—விசித்ரகோபுரம் ஸ்தூபியுடன், பண்ணில் புகழ்ந்துரைக்—கப்பெற்ற—பண்புள்ளதாம்திரு ஆலயத்தில், மண்ணுடன் விண்ணளக்-தத்திரு—மாலாகிய ஸ்ரீமந் நாராயணன், கண்ணும் கருத்தும்-மகிழ்வெய்தக்-காக்ஷியளித்தடி



யாரைக்காத்தும், நின்றோங்கும் நம்பியாயும்—தேவன்—நீர்மையாய்வீற்றிருக் கும்நம்பியாய், நன்றாக சேஷன்மீதிற்—றுயில்—நாதன் பள்ளிகொண்ட நம்பியாயும், அன்றூடம் அன்னதானம்—மாந்தர்க்—களிக்கும்திருப்பாற் கடல்நம்பியாய், மன்றூடி வரம்சேரும்—அடியார்க்கு—மகிழ்ச்சியாயருள்செய்யும் மலைநம்பியாய், இந்தவிதமைந்து—வடிவாக—இந்திரேசன் அழக நம்பியென்னும், சுந்தர பரிபூர்ணேசன்—ஒப்பில்—சுபகரம்அன்பருக்கீந்துக்காக்கும், எந்தையின் பேரரு—ளால்சம்பத்—தோராளமாகப் பெருகி வாழும், விந்தைசேர் குறுங்கை-மடத்தினில்-விளங்கும்ஸ்ரீபேரரு ளாளரென்னும், ராமாநுஜ ஜீயர்—பால்கிருபை—ராஜீவாக்ஷன்நம்பிச் செய்தோங்கியும், க்ஷேமாதி சுகபோகங்—கள்தன்னை—சேவிக்கும்பக்தருக் கீந்தும் திவ்ய, நாமாதி யால்கானம்—செய்தேற்றும்—நல்லன்பர்க்குரியதெல் லாமளித்தும், ப்ரேமாதி யால்கிறைந்—தத்தேவன்—போன்பால்வனச்சிறப்பொன்றுரைப்பேன், தி.

## நந்தவனச் சிறப்பு.

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி.

நந்தா வனம்மிகவும் அந்தம்—நாடிப்பார்த்தாலானந்தம் விளைக்கும் முதின் கந்தம், மந்தாரைக்கொன்றை-நந்தியா வட்டம்முதலான மாக்ஷிமையென்சொல்வேன், சந்தோஷம் மேவும்அதின் சந்தம்-சந்ததமுள மகிழும், இந்திரப் பெற்றதாகவு யர்ந்த-இணையற்ற தருவடர்ந்த ந.

### முடுகு.

வாரிஜமுகிகள் சேர்ந்துகளிக்கும்—வனஜங்கள்மலிந்தஸ ரோவரம் பலதிலும், நீராம்பல்செவ் வல்லிதாமரை—நீலோத்பலசெங் கழுநீரகப், பேர்பதினாயிரம் பெற்றுளமலர்களின்—பெருமையைப்புகலவோர் நாவாலமோ, முல்லைமல்லிகை மெல்லியஜாதியு—முள்ளமகிழ்ந்திடும் நல்லதன்பகம், சொல்லுவேன்பாதிரி ரோஜாபலதும்—சோகமகற்றும்சூ ரியகாந்திகளும், அருமையாய்ப்பெருகிய மருக்கொழுந்தும்—அழகியதாழையும் புகழ்சாமந்தியும், மதிமிகமகிழும் கதிருபச்சையும்—மாக்ஷிசேர்வெட்டிவே லாமிச்சங்களும், அஷ்டாக்ஷரநாக் கானதுளசியும்—அரவணிபரமனுக் குரிய வில்வமும், கஷ்டங்களகற்றும சோகவிருக்ஷமும்—கதிர்வடிவேலவ னுகிய வேங்கையும், கெட்டியானதேக்கு வீட்டிபலாவும்—கெம்பீரம்மிகும் மா பலதினுசும், எட்டியானத்தை முட்டும்மூங்கிலும்—எழிலாய்வபுர்ந்துள பாக்குதென்னையும், இட்டமதாகிய வாழைகள்பலதும்—இணையிலாநிச்சிலி காரத்தைசொய்யா, பட்டுபோல்புஷ்பம் பாதிரிபுன்னையும்—பண்புசேர்

பொம்மிடி மாஸாஞ்சியும், எட்டிபரிக்குமா தளைபலஜாதியும்—என்ணிலடங்கா தருவகையோங்கியும், சட்டமதாகிய மயில்குயில்கிளிகளும்—சந்திமிலேவுங்கௌ தாரிகாடைகளும், வட்டமிட்டுயரும் வன்கெருடகளும்—வயிற்றில்குட்டியைகட்டும் வானரயினங்களும்.

மட்டிலடங்கா மஹிமைகள் வாய்ந்த
மலர்வனத்தின்மிக மாக்ஷிமை யைவெகு
திட்டம தாயுரைத் திட்டவெங்கடாரயன்
தீந்தமிழ் சிறப்பினால் தீர்க்கமாயோங்கும்.

---

விருத்தம்.

இவ்வித மாக்ஷிவாய்ந்து இலகும்தென் குறுங்கைதன்னில்
செவ்வையா யமர்ந்துமேதன் சேவடி பஜிப்போருக்கு
இவ்வுல கினிலிஷ்டார்த்தம் ஈந்துள நம்பியின்றன்
பவ்யமா யேற்றிப்போற்றிப் பாடுவான் புகழுவானே.

எந்நேரமுமுந்தன்சந்நிதிதன்னிலே என்ற வர்ணமெட்டு.

இராகம் ஆரபி தாளம் ஆதி.

பல்லவி.

வாராமோ நானுந்தன் வண்மைசேர் சந்நிதிக்கு
வனஜ நாபனே மெய்யனே.

அநு பல்லவி.

விரலால் மலையெடுத்து விண்ணேசன் மதமழித்த
சரலாக வம்படைத்த கமலத ளாக்ஷனே.

சரணம்.

அகில மனந்தபாதா அற்புத ஞானபோதா
ஆரணங் களுக் கதீதா
புகலுவ தற்கொண்ணாத புஷ்கரத் தான்விநோதா
பகலும் மிரவுமுன்னைப் பாடிப் புகழ்வேன்நாதா.



இராகம் கல்யாணி தாளம் சாப்பு.

பல்லவி.

கோபுர தரிசனமே நான் செய்த
கோடி விமோசனமே.

அநு பல்லவி.

பாப ராசிகளெல்லாம் பருதிமுன் பனியாக
ஸ்ரீபதி சந்நிதி சேர அகலச்செய்யும். கோ.

சரணம்.

1

சிந்து நதியில் உள்ள திருப்பாற்கடல்
சிறந்தசுத் படித்துறை யில்
அந்தரங் கசுத்தியாய் அமிழ்ந்துநீ ராடியே
வந்துப் பார்க்கவேநம்பி வசிக்கும் கோவிலுக்குள்ள. கோ

2

மணியோசைக் காதில்கேட்டு மாதவன் றாட்கள்
மனதிற் பதிந்தவண்ணம்
பிணியற்ற மான்போலும் பித்தன்போ லவேமோடி
இணையற்ற குறுங்குடி சேர்ந்தங்கு நான்கண்ட. கோ

3

அண்டர்கள் போற்றும்பாதன் அழகநம்பி
அடியார்க ளுளத்தில் வாஸன்
பண்டுசெய் தீவினைப் பயன்களை யகற்றிநம்
பாடுவா னுக்கன்பாய் பரந்தாமனைக்காட்டும். கோ.

---

விருத்தம்.

நம்பாடு வான்பொழுத நம்பியை நாடிப்பார்க்க
எம்பிரான் முன்செங்கெருடன் எழிலதா யுயர்ந்துநிற்க
வெம்பியே மனதிலேங்கி வேதங்கள் புகழும்தேவே
வம்பதாய் புன்னொன்றிங்கே வழிமறித் திடுவதென்பானே.

இராகம் ஆனந்தபைரவி தாளம் சாப்பு.

பல்லவி.

பரங்காமன் திருக்காக்ஷி பார்க்க விடையூறுயென்
பாபம் தடுப்பது போல்.

அநு பல்லவி.

பருத்தொன்று குருக்கிட்டு பசுபுங்க ளேவிசித்து
சுறுந்துள பசம்பியின் நடையில் நின்றுக்கொண்டதே. ப.

சரணம்.

1

அவனியெல் லாம்சுற்றி அழகநம் பியைக்காண
ஆவல்கொண் டோடி வந்தேன்
புவன பயங்கரனும் புல்லரக் கன்விட்டும்
இவனோரா நடுவினில் இடைஞ்சல் செய்கிறானோயோ. ப.

2

முன்செய்த தீவினை முதகழு சாமியென்
முன்வந்து தோன்றிய தோ
என்செய்வேன் ஜெகநீசா எதும்கா னறியேனே
உன்செய்கை யோவேறோ உண்மைநீ யுரையாயோ. ப.

3

பறையன் ஆனதினால்என் பக்கத்தி லணுகாதுன்
பாதத் தாமரை யெனக்கு
தெரியும் படியாயித்தத் தோடி யில்லின்றும்
இன்றயவா பரவைசெய் இடரகற்றியாட் கொள்வாய். ப.

---

விருத்தம்.

பக்தன்கம் பாடுவாரும் பாற்கடல் சயனப்பாதம்
வெக்தமாய்க் காண்பதற்கு விக்னமாய்க் கெருடனேற்க
முக்தியை யளிக்குமே [illegible] நதிகள்சாற்ற
பக்தனைத் [illegible] பருந்தினை குறுகச்செய்தான்.



சக்க சக்க கடமகரீ கமபாமகரிச ரீசநிசா என்ற வர்ணமெட்டு,

கோட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

1.

குறுகியிருப்பாய் கெருடாநீ குணமிருக்கம்பரி வென்வந்தான்
நெறிமுறை யனுவும் வழுவானேன்
நெஞ்சம நிற்கவே ஏவுவந்தோன். கு.

2.

ஞானிமுறைகளோ சாற்றுகிறான் சரணமடைந்துமன் றாடுகிறான்
நீதி புகன்றபோ றாடுகிறான்
நிற்ற பதைக்கண்டு வாடுகிறான். கு.

3.

முக்திகன்னான்னையு மளிப்பேனென் மூலஸ்தானத் தையுமீவேன்
சக்தியை வேண்டிடி னும்சலியேனென
சார்ந்தவர் மனக்குறை யைப்பொறுக்கேன். கு.

---

விருத்தம்.

1.

கெருடனைக் குறுகச்செய்தும் கேதாரி குலிசனேனென்
அருடனை யுனர்ந்திருந்து ஆலயத் துள்ளிலோங்கும்
உரியஸ்ரீ பலிபீடத்தோ டுன்னத த்வஜஸ்தம்பத்தையும்தான்
சரியதாய் வடக்கொதுங்கிச் சார்ந்திருக் கச்செய்தானே.

2.

இவ்வித மழகநம்பி இதயத்திலும் பொங்கி
பலரும் பாங்கான்தன் பக்தரானந் காக்கிறனோ
செவ்வையாய்ப் பார்த்துபக்தி செறிந்ததனம் மகிழ்வதற்காய்
திவ்விய சேவையிந்தத் திருவருள் புரிந்திட்டானே.

3.

கெருடனும் குறுகிநிற்கக் கேதங்க ளகன்றுபக்தன்
இருடிகள் [illegible]
[illegible]
அருடனைக் கொண்டாத்த மானந்த மாய்ச்செய்தானே.

எந்நேரமுமுந்தன் சந்நிதிதன்னிலே என்ற வர்ணமெட்டு

இராகம் ஆரபி தாளம் ஆதி.

பல்லவி.

ஆடினான் நம்பாடுவான் அழகநம் பியைப்போற்றி
ஆனந்தத் திருக் கூத் து.

அநு பல்லவி.

பாடிக்கை சிகராகப் பண்களால் கானம்செய்து
காடும்பே ரின்பத்தை நானின் றடைந்தேனென்று. ஆ.

சரணம்.

1.

அண்டங்கள் யாவற்றிலும் அகில சராசரத்தும்
அமர்ந்தோங்கும் ஸ்ரீஹரி யே
தொண்டர்க ளுள்ளத்திலும் தோன்றும் தூயமாலே
தோயஜாக்ஷனே தகிங் கிணதோம் தகிங் கிணதோமென்று, ஆ.

2.

ஆரண மாகமங்க ளாதிபுகழ் தேவனே
அணுமேரு நிறைந்தவ னே
காரணமீ உன்னையன்றி காணேன் சுந்தரபரி
பூரண னேயென்னை புனிதனு கச்செய்யென்று. ஆ.

3.

தசவித ரூபனே தைத்யகு லாந்தகனே
தசக்ரீவ சிரோ ஹரனே
ஸசிமுகி யாமசோதை பாலனே பசுமேய்த்த
ஸாரஸ நாபனே சரணம் சரணமென்று. ஆ.

---

அக்ஷய லிங்கவிபோ என்ற வர்ணமெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் மிஸ்ர சாப்பு.

பல்லவி.

தரிசனம் செய்தானே நம்பாடுவான்
தரிசனம் செய்தானே.



அநு பல்லவி.

தரிசனம் செய்தானே தாமரைத் தாளை
வரிசை வரிசையாக வாழ்த்தித் துதித்துப்போற்றி

சரணம்.

1.

அங்கம் பரவசமாய் ஆனந்தக் கடலாழ்ந்து
அடிக்கடி ஸ்ரீஹரி அபயம் அபயமென்று
மங்கள காமனே மாரம ணனேயெந்தன்
மனசங்கை களகற்றி மன்னித் தருள்கூறென்றும்
சங்க சக்கரக் கைய னேயுன்
சரண மேகதி யென்று பன்முறை
இங்கி தமாய்த்துதி யனந்தம் சாற்றியே
ஈசனே ரிஷி கேச னென்று த.

2.

உலகபந் தத்திற்பட்டு உன்சேவை களைவிட்டு
உண்மையை யுணராமல் உன்மத்த னாகினேன்
அலைகட லிற்றுயிலும் ஆதிநா ராயணா
அடியேன்பால் க்ருபைகூர்ந்துன் அடியார்க ளில்சேர்த்து
கலுஷ மகற்றியே காத்தி ரக்ஷிக்க
கர்த்த னேயிது தருண மென்றும்
பலக லையும்புகழ் பக்த வத்ஸலா
பாஹி பாஹிமாம் பாஹி யென்று. த.

3.

நீலமே கவண்ணனே நித்யானந் தமயனே
நிகமகோ சாதேவர் ரிஷிகள னுனவா
ஆலிலை யிற்பள்ளி கொண்டவ னேயென்றும்
அடியார்க ளைக்காக்கும் ஆவல்பூண் டவாதி.
மூல மேயெனக் கதறு மானையின்
முன்பு வந்தவன் றுயரைத் தீர்த்தவா
நாலு பதங்களு மடைந்து மழகிய
நம்பி யுனைநம்பி னேன்என் றேற்றி. த.

விருத்தம்.

பாடுவான் நம்பிக்காகவிப் பார்த்தின்ப மோங்கியுள்ளில்
நாடுவதன் அரக்கன்பால்தான் நவின்றதோர் வாக்கேற
பாடுவான் கைசிகத்திற் பூற்பல பண்கள்நேராய்
ஓடுவான் காட்டைடனோக்கி ஒப்பாரு மில்லான்தானே.

விருத்தம்.

1.

நம்பியைப் பணிந்தன்பாக நம்பாடு வானுமேக
அம்புதி சயனன்தானோர் அந்தண வடிவனாகி
வம்புகள் நிறைந்தவாக்கை வழுத்தியிவ் வழியேசென்றால்
வெம்புலி யரக்கரால்மாண் வேதையுண் டேகேலென்பான்.

2.

ஆரடா போகின்றாய்நான் அறிந்திடப் புகலுன்பேரைப்
பாரடா உனக்கோர்வார்த்தைப் பகருவேன் பக்ஷமாக
நேரடா நன்சொல்வாக்கு நெஞ்சினில் வஞ்சமெண்ணேல்
கூறடா வேகமென்று குருக்கிட்டான் குசுமநாபன்.

பகவானாகிய மாயாமறையோனுக்கும் நம்பாடுவானுக்கும் தர்க்கம்.

காபோ்ஹம்மது முஸ்தபாமனு ப்யாரிலாகிரே என்றமெட்டு.

இராகம் ஹிந்துஸ்தான் தாளம் சாப்பு.

கண்ணிகள்.

1.

செல்லுவ தெங்கேயென் செவியேற்க நல்வார்த்தை
செப்புவாய் நீயென்னிடம் அடேநீ
செப்புவாய் நீயென்னிடம்
வல்லவ ரோநான் வழிஞனோர் பஞ்சமன்
வழியாத்திரை யாய்ச்செல்ப வன்.

2.

இவ்வழி சென்றால் இருள்கானில் சேர்க்கும்
இடருகள் பலதுண்டாகும் உனக்கு
இடருகள் பலதுண்டாகும்
எவ்வழியேனும் ஏகுவேன் சுக
எதிர்ப்புகள் வோத்தடுத் தல்.



3.

கானகம் சென்றால் கரடி புலிகளுண்டு
காணுவா ராக்கருன்னை சென்றால் காட்டில்
காணுவா ராக்கருன்னை
கானகம் வாடேன் காதலோர் காரியம்
கான்செல்வேன் நீரேகு மே.

4.

காரிய மென்ன கழறுவா யென்பால்
கலங்கிடேல் காத்திடுவேன் மனதில்
கலங்கிடேல் காத்திடுவேன்
வீரியம் பூண்டேன் விண்ணகர் புகுவேன்
வீணாய் வாழமாட் டேன்.

5.

உண்டான தைச்சொல் உத்தம னேநில்
உன்மீதி லன்புகொண்டேன் உண்மையாக
உன்மீதி லன்புகொண்டேன்
தண்டாம ரையோன் வரைப்போ லரக்கனுக்
கிரையாக நான்போகின் றேன்.

விருத்தம்.

அரக்கனுக் குரைத்தவாராய் அங்கவன் பசித்திருப்பன்
சுருக்கினிற் செல்லவேண்டும் சூதல்ல விதுமெய்யென்ன
இரக்கம்ப னங்கள்செய்து சேர்த்திரு காமும்கொட்டி
இரக்கமாய் வழிமறித்து ஈசனும் தடுத்திட்டானே.

விருத்தம்.

எட்டியே நிற்கவேண்டும் ஏழைநான் புலையனுண்டே
சட்டமு முரைக்குதையா சண்டாளர் விலகவென்று
இட்டமாய் வந்தெனக்கு இதமியம் பிடவுமெயித்
திட்டன்செய் தவங்கள்நானோ தூய்யனே போற்றிபோற்றி.

மாயாமறைபோனுக்கும் நம்பாடுவானுக்கும் தருக்கம்.

ஓரடிவைத்து மற்றோரடி வைத்திட என்ற வர்ணமெட்டு.

இராகம் சாவேரி தாளம் ஆதி.

கண்ணிகள்.

1.

அடியேனை யுற்றிடல் அறமன்று ஆண்டோன்
அவனியில் புலையனையே ஐயேகேளும்
விடமும் நீறாய்ப்போகும் வேதியர் குறையென்று
விதிகளி லுரைத்திடு தே ஐயே. (அடியேனை).

2.

உலகவியாபாரங்கள் உயர்வுதாழ் வென்பது
உண்மையொன் றல்லவோடா அடா அடா
கலைகளி லுரைப்பதும் காண்பதெல்லா மீசன்
காரணம் தானல்ல வோ டா. (உலக).

3.

காரணமாகிலும் காசினி யின்முறைப்போல்
கடையான சண்டாளன்நான் உண்மையாக
ஆரணமோதிடும் ஐயரே அடியேனை
ஐய்யோ கெடுத்திடா தீ ர். (காரண).

4.

கெடுக்கவந் தவனல்ல கேளடா யென்வாக்கை
கேலியெவ் றெண்ணவேண்டாம் அடே பறையா
இடுக்கங்கள் நேர்ந்திடும் இவ்வழி நீயேக
இதயத்திற் றுணிவுகொண் டே ன் நான் (கெடுக்க).

5.

மார்பில் முப்புரிநூலும் மறையோதும் முககாந்தி
மலரோனைத் தோன்றுதையே உம்மைப்பார்க்க
கார்மேக வண்ணன்முத் திரையங்கத் தணிந்தவர்
கடையேனகன்றுச் செல்லு வே ன். ஐயா (மார்பில்).



விருத்தம்.

மாதவ ஞானமாயா மறையவ னுரைப்பதெல்லாம்
நீதக லகற்றுமென்றுன் திண்ணமா யுணர்ந்தும்தான்முன்
ஓதிய வாக்கைப்போக்க ஒருக்காலு மெண்ணுறேன்
வேதியன் தானுமாக வேண்டில் தியம்புவாரே.

இராகம் முகாரி தாளம் மிஸ்ர சாப்பு.

தர்க்கம் கண்ணிகள்.

1.

ஆதிகுலத் தினரே இந்த
அடியேனை விடுமை யா
பாதகம் நான்செய்யேன் அரக்கன்
பசித்திருப் பானே யா.

2.

பசித்திருப் பானென்று நீசெய் தின்ற
பாசாங்கு கள்வித் தை
பசுக்களைத் தின்பவனே நானுந்தன்
பண்பறி வேன்பறை யா.

3.

பறையனென்பது உண்மைதான் நான்முன்பு
பகர்ந்தசொல் லைத்தவ றேன்
ஹரிதினை மாயுரைக்கும் ஏகாதசி
அரியநற் பலனிழக் கேன்.

4.

பறையர்க் கேகாதசியோ விந்தையிந்த
பாரில்நான் கேட்டறி யேன்
அரியகோ வதைசெய்துண் ணும் சண்டாளா
அறையேல்வீண் வாக்கினி மேல்.

5.

வீண்வார்த்தை யல்லவையா நான்சொல்வது
விஷ்ணுவின் பாதத் தாணை
சாண்டையிற் றைவனுக்கும் இப்புவியாட்கை
சாஸ்வத மென்றெண்ணே னே.

காட்டிற மிக்கவங்கு கண்டு—காய் கனிகிழங்குவகை கொண்டு
என்ற வர்ணமெட்டு.

லாவணி.

1.

காராய ணனைமற வேனே ———— என்றும்
நான் மறை நெறியைவழு வேனே
சோராமல் பஜனைசெய் வேனே
சொல்வாக்கழியேனே —— சோர்வுமெய் இடேனே
சோபையாய் விளங்கிடு வேனே ஸ்ரீமக்.

2.

பஞ்சபூ தாக்யச ரீரம் ———— ஐயா
பார்த் துணர்ந்தா விதுமிக நேரம்
அஞ்சும்மூன் றெழுத்தே தீரம்
அதுவேமூலாதாரம் —— அறிவது தான்ஸாரம்
அறியா தவண்புவி பாரம். ஸ்ரீமக்.

3.

தை தாயுஞ்சத மல்ல ———— உன்
தனை யர்க ளாதிசத மல்ல
டக்தன் வாழ்வும்சத மல்ல
னென்றிப்பார்நீமெல்ல —— உண்டோநிச்சயம்சொல்ல
உலகத் தியல்பும்சத மல்ல. ஸ்ரீ

4.

னி வாழ்க்கைபொல் லாது ———— ஐயோ
மாத் ராம் லென்றும்நில் லாது
ஞானத்தை மடமைவெல் லாது
னென்பதுமாண்டீது —— கலம்டையவிப்போது
நான்முகன் பிதன்புக ழோது. ஸ்ரீமக்

5.

ன்புவி யாவும்விஷ்ணு மயமாம் ———— சீராய்
வ மூத்துதல் வேதஸம் மதமாம்
ான்புகல் வதுஸா தகமாம்
நானிலம்புகழ்திருக் —— குறுங்குடியழகிய
நம்பியின் திருவடி சதமாம். ஸ்ரீமக்.

———



விருத்தம்.

விடையங்கள் பலதும்சீராய் வெறியன் விண்டும்பக்தன்
இடமனை தாகவேநான் இன்னமாய்ச் செல்வேனென்ன
துடிதுடித் திதழ்களாடத் துயமா லாய்பூசாலும்
சடுதியில் முனிவுமீறி சாற்றுவான் தூற்றிவானே.

———

நியாயம் தானோநீர் சொல்லும் என்ற வர்ணமெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி.

நியாயம் தானோநீ சொல்வாய்.

அநு பல்லவி.

நீயாரென யென்னை நின்மனத் தெண்ணினும்.

சரணம்.

1

உலகத்தி லில்லா வழக்கம் ———— இது
உதித்ததுன் வல்வினைப் பழக்கம் ———— எந்த
கலையிலும் புகலா வொழுக்கம் —— அடா
நானகம் சேர்ப்பித்துன் காயத்தை யொழிக்கும்.

2

பறையருக் கேதுஞானி திவசம் ———— நீ
பகர்வதெல் லாம்மூழு மோசம் ———— கக்
நெறிக்கெத்தன் சொல்லுப தேசம் ———— உன்
நெஞ்சம் பதைபதைக்க நேர்ந்திடும் க்லேசம்.

3.

காட்டின் வழியாய்ச்செல் லாதே —— அந்த
காணும்தூர் நின்றதுபோல் லாதே —— உந்தன்
ஆட்டங்கள் அவிடம்செல் லாதே —— வரும்
ஆபத்தைப் போக்கவுன் ஆவியும் நில்லாதே.

———

விருத்தம்.

மறையவ னாகவந்த மாதவன் பாடுவோன்பால்
நெறிமுறை யியம்பிப்பார்த்தும் நேர்மலி பக்தனாகானை
உறுதியா னுளமகிழ்ந்து உன்விதி போலாமென்று
மறுமொழி புகலாமீல்தான் மாயமா யகன்றிட்டானே.

மறையவ னுரைத்ததெல்லாம் மறுத்துநம் பாடுவோன்தான்
விரைவதாய் வருவேனென்று விளம்பிய சத்தியத்தின்
நெறியது போலரக்கன் நேரினி லெய்தியேயுன்
அரியவெம் பசிக்குயெந்தன் ஆக்கையைப் புசியென்பானே.

யாதவநீபா யெதுகுலநந்தன—என்ற வர்ணமெட்டு.

இராகம் ப்யாக் தாளம் ஆதி.

பல்லவி.

அரக்கசி ரோமணி அடியேனிதோ வந்தேன்

அநு பல்லவி.

இரக்கமில் லாமலென்னை இக்ஷண மேதின்பாய். அ.

சரணம்.

1

அழகசம் பியின்பாதம் ஆனந்த மாய்த்தொழுதேன்
புழுகனெனும்பேர் கேட்கேன் புசித்திடுவா யென்னை. அ.

2

உதிரம் நரம்பெலும்பும் ஊனும்சேர் உடல்நல்ல
கெதிபெறநீ தின்பாய் கேவல மாகாமல். அ.

3

பாவப காரத்திற்காய் படைத்தான யன்தேகத்தை
சுர்பதி நான்சேர சீருக்கினி லருந்துவாய். அ.

விருத்தம்.

மதிதனில் மரணமென்னும் மாண்பய மின்றியென்னை
கெதிபெறத் தின்பாயென்று கேட்குநம் பாடுவோன்பால்
அதிதியா மெனக்குநீசெய் அறங்களின் பலன்களீந்தால்
உதாவே தனைபோமென்று உரைத்தன னரக்கன்தானே.



இராகம் நாதநாமக்கிரியை தாளம் சாப்பு.

ஆனந்தக்களிப்பு—கண்ணிகள்.

1.

ஐயனேஜீவனி பத்தன்—உன்னை
அறியாமல்மோசம்போ னேனேநான் பித்தன்
மெய்ப்பொரு ளுணர்ஜீவன் முத்தன்—உத்தன்
மேலானகுணத்தைப்பு கழ்வோன்பா சித்தன்.

2.

உலகினிலரக்கனா யுதித்தேன்—அழியும்
உடலையேயானென்றும் சதமென்று நினைத்தேன்
பலவுயிர் களைக்கொன்று புசித்தேன்—பொல்லா
பாதகங்களனந்தம் பாவிநா னிழைத்தேன். ஐ.

3.

பலிகொள்ளென் றென்னைச்சொல் லாதே—துஷ்ட
பான்மையால் விளைந்திடும் பாவம்பொல் லாதே
கலியும்பக் தரைவெல் லாதே—இந்த
கடைகெட்டோ னுற்றலுன் னிடத்திற்செல்—லாதே. ஐ.

4.

நம்பாடு வானென்னும் நாதா—அழக
நம்பியை யென்னாளும் துதிசெய்வி னோதா
அம்புவி புகழ்ஞான போதா—மூட
அரக்கனே மென்னிடம் இன்னமும் வாதா. ஐ.

5.

என்மீது நீர்கிருபை கூரும்—நான்செய்
எண்ணில்லா தீவினை யகலக்கண் பாரும்
வன்மமென் னுடைதன்னைக் காரும்—இவ்
வடியே னுய்யவேபுண்ய பலன்களைத் தாரும். ஐ.

விருத்தம்.

அரக்கனுக் கறிவுதோன்றி அயர்ந்துநம் பாடுவோன்பால்
இரக்கமாய் வணங்கியேபுண் ணியபலன் களைத்தான்வேண்ட
சிரக்கரம் கூப்பியெந்தன் ஜீவனைத் தருவேனன்றி
விரிக்கொணாப் பலன்களீதல் விதிமுறை யலவென்பானே.

இராகம் சாவேரி தாளம் ஆதி.

பல்லவி.

அரக்கனே நீயூண்ட ஆவல்போ லென்னுடலே
அளிப்பதாய் நான்முன்பு அறைந்ததின்பின்

அநு பல்லவி.

னிறக்க பயந்துமேபுண் ணியபல னீவதென்றால்
சிறக்குமோ எந்தன்வார்க்கு சீச்சியென் றிகழாரோ.

சரணம்.

1.

வாக்கைத் தவர்ந்தவர்கள் வானவ ரானாலும்
வாய்ந்த புகழும்கீர்த்தி வாழ்வுக ளாநிருன்றி
ஆக்கை யழிந்தபின்பு அந்தகன் விதித்திடும்
ஆக்கினை யாம்நரகம் அநுபவித் திடநேரும்
பாக்கிய வானேயிப் பாடுவா னிடபேர்
பார்மிசை விளங்கவுன் பசிக்கெனைப் புசியாமல்
வாக்கியம் வேறொன்றும் வழுத்தல் தகாதென்றிவ்
வடியவ னைநீர் வதைத்துண்ணு மையா.

2.

மானிட ருக்குத்தகு மானவிஷயம் கேட்பாய்
மனதை யீசன்பால்நாட்டி மாறுமொழியும் வாய்ந்து
காலென்னு டிகந்ததையென் னுளுமுன் னில்கொள்ளாமல்
நல்மன துடனேதம் நிலையுணர்ந் தறம்செய்வோர்
மானிலத் தினில்புகழ் கீர்த்தியும் மலிந்து
மங்கள மாகவே மகிழ்ச்சியாய் வாழ்ந்துபின்
வானவ ராதியரும் வணங்கிப் பணியும்சரி
வாதன் றிருப்பதமு மெய்துவா ரையா.

3.

புண்ணிய வானேயெந்தன் புத்தியில் மகிழ்வோங்க
பூர்ண தயவாயென்னை புசித்துன் பசியைத்தீர்ப்பாய்
மண்ணிலுன் கீர்த்தியென்றும் மலியும் நாளும்திரு
மாலின் பதம்பெற்றுய்ய மாண்க்ருபை செய்வாயென்றும்
விண்ணவர் புகழே காதசி பலனையும்
விஷ்ணுவைப் புகழ்கை சிகப்பண்கன் பலனையும்
கண்ணிய வானேயுனக் களிப்பதாய் நான்முனம்
கழறவே யிலையென்பால் கருணைகூ ரையா.



சிதப்பர தரிசனார் என்ற ஸர்ணரோட்டு.

இராகம் முகாரி தாளம் ஆதி.

பல்லவி.

எகா தசிபலனும் கைசிக பலனும்
என்மனம் தா வேற்குமோ.

அநு பல்லவி.

ஏகாக்ர சித்தமாய் எனக்கு முனக்குமமுன்பு
ஏற்பட்ட வாக்கிலனு வேனும்தவறே னையா. எ

சரணம்.

1.

ஆதியி லுந்தன்பசிக்கு ஈந்தன்தே கத்தை
ஆகார மாக்கிக் கொள்ளென்று
நீதியா யிவ்வெளியேன் நிகழ்த்திய வாக்கதை
நீமறுத் தானுமென் நினைவுமாறு தையா
கூறாதே வேறு சோறாதே—பசி
ஆறாதே என்னுன் சோராதே. எ.

2.

அழகாம் பியின்காகதியை ஆனந்த மாக
அடியேன்கண் டோடி வந்தேன்
புழுகனென் னும்பேரிந்த பூவுல கினில்கேட்கேன்
புண்ணிய வானேயுன்பால் புகன்றவாக் கினில்சற்றும்
வழுவேனே சத்யம் அழியேனே—நாகில்
முழுவேனே உன்னைத் தொழுவேனே. எ.

3.

நானிலம் புகழ்குறுங்கை க்ஷேத்திரத் தோங்கும்
நம்பியின் பாத சாக்ஷியாய்
மானிலம் விண்ணும்கதிர் மதியுள்ள வரையென்பேர்
மாகதிசேர் பாடுவானாய் மலர்ந்தல கில்விளங்க
துணிந்தேனே உன்னைப் பணிந்தேனே—புகழ்
அணிந்தேனே உன்னம் கனிந்தேனே. எ.

காவடிச் சிந்து.

செந்தியாநகர் என்ற வர்ணமெட்டு.

கர்க்கம்.

இராகம் செஞ்சுருட்டி தாளம் சாப்பு.

1.

அரக்கனே எனையுன் அரும்பசிக் காயரைக்
கணத்தில் கொன்றுத் தின்றுன் ஹுனமகிழ்வாய்--எனமே
விளக்கம்வைத் தெந்தன்சொல் லுக்குவப்பாய்—ஐயா
பொருக்கே னென்மொழி தவறிப் போனுல்
சிரிக்கு முலகெலாம் சீச்சி யென்றிடும். அ.

2.

உன்னைக் கொன்றுத்தின் றுய்பிழைப் பேனுனான்
உத்தம னோகா ணன்பக்தனே————எனக்
கன்னைதந் தைகுரு வானவனே———ஐயா
என்னி டத்தினில் கருணைகூர்ந் துயர்
பன்ன லப்புண்ய பலன்க ளளிப்பாய். உ.

3.

ஆதியில் உன்னை வசப்பட்ட போதெந்தன்
ஆக்கையை யுன்பசிக் களிப்பதாகச்———சொன்ன
போதிந்த வாக்கைநீ புகலவில்லை———ஐயா
மேதி னியின்பொல்லா வாழ்வை மதிக்கேன்
மாத வன்பத மலரை மறக்கேன். அ.

4.

முன்னுளில் செய்த தீவினை யாலிந்த
மூட வரக்கச் சென்மம் எடுத்தேன்———பாவி
இன்னுளில் நல்வழி யைவிடுத்தேன்———ஐயா
இன்ன மாகிலும் ஈசன் விஷ்ணுவின்
உன்ன தப்பத மடைய வருள்புரி. உ.

5.

ஐயனே யென்னுல் ஆகாத செய்கையை
அறைவதி னுல்பயன் ஆவதுண்டோ———என்னைப்
பொய்யனென் றுல்மனம் பதருமையா———நானும்
கையைக் கூப்பியுன் கழல்ப ணிந்தேனென்னை
ஐய மில்லாம லருந்து மையா. அ.



விருத்தம்.

இந்தமாண் வாக்குவாதம் இருவர்செய் திருக்கும்போது
சுந்தர பரிபூரணன்பூ சுரவடி வெடுத்தங்கெய்தி
எந்தகா ரணத்தையுள்ளில் எற்றழல் கின்றீர்தனை
எந்தன்பா லியம்புவீரேல் எளிதில்தீர்ப் பேனென்றுனே.

இராகம் சாவேரி தாளம் ஆதி.

பல்லவி.

அரக்கனும் பாடுவானும் ஆசம்கசிந் துருகியே
அவர்செய்யும் வழக்கைத் தீர்க்க.

அநு பல்லவி.

விரிக்கொணு மஹிமைசேர் விஷ்ணுவாம் நம்பிசதா
வரிக்கும் கெருடனின்றி வந்தான் வேதியவடிவாய். அ.

சரணம்.

1.

வந்தஸ்ரீ மாதவன் வாதாடும் இருவரின்
வாய்மொழிக் கேட்டும்பல வகையில் பரிகஷித்தும்தன்
சிந்தையி லன்புகூர்ந்து சிறந்தசா யுஜ்ஜியமும்
தந்திட வேகருணை தான்பூண் டறையலானன். அ.

2.

ஆரடா நீவிருவர் அடாவழக் கிடும்சேதி
அனைத்தையும் உண்மையாக அறைந்தா லுடனே தீர்ப்பேன்
போரிட வேண்டாமுங்கள் பொருட்டாக வேவந்தேன்
கோடா வென்றன்பாக நெடியோனன்பு கன்றிட்டானும். அ.

3.

மறையவ னுரைகேட்டு மகிழ்ந்தூகம் பாடுவானும்
மனதில் மிகுந்ததுயர் மேவிய அரக்கனும்
பெருமை மிகப்படைத்த பெரியவ ரேயென்றேற்றி
பெட்புடன் தாங்கள்பூண்ட பேரவா வைச்சொல்வாராம். அ.

விருத்தம்.

வேதியன் றனையரக்கன் வேண்டியிம் மேலோன்செய்யும்
நீதிசே ரேகாதசியின் நிகழ்த்தொருப் பலனொடென்றும்
நீதா னரியைப்பாடும் திவ்யகை சிகப்பண்பலனும்
மாதவ ராச்செய்தாலென் மனமகிழ்ந் திடுமென்றானே.

மறையவ னடியைப்போற்றி மாக்ஷிசேர் பாடுவானும்
இறையவா இவ்வரக்கன் இயம்பிடும் சொல்தகாது
பறையனும் அடியேன்முன்புன் பசிக்கெனைப் புசிப்பாயென்று
உறுதியாய்ப் புகன்றேனன்றி உரைத்திலேன் வேறென்றானே.

அடிபணிந் திரண்டுபேரும் அறைவதைக் கேட்டுமவருள்
திடமதும் பரிசோதித்துத் திருமாலா மழகநம்பி
உடனவர் முன்செய்வினையும் உணரநல் லருள்புரிந்தும்
உடையவன் க்ஷணத்திற்கெருடா ரூடனாய் விளங்கினானே.

இராகம் சஹானா தாளம் சாப்பு.

பல்லவி.

தரிசனம் ஈந்தானே தயைகூர்ந் தழகநம்பி
தரிசனம் ஈந்தானே.

அநுபல்லவி.

தரிசனம் ஈந்தானே தனதிரு அடியார்க்கும்
வரிசை வரிசையாக வானோர்க ளடர்ந்தேற்ற.

சரணம்.

1.

நாரதர் யாழேந்தி பாடவும் தும்புரு
நன்மிரு தங்கம் முழக்க
சோதர யப்ஸர பெண்கள் நாட்டியமாட
சீர்மையாய் அயனிந்த்ரன் நீலகண் டனும்சூழ.

2.

கெருடா ரூடனாகியும் கௌத்துவ பீதாம்பரமும்
கௌமோ தகியு மணிந்து
இருகையில் பாஞ்சஜன் னியமும்ஸு தர்ஸனமும்
இணையற்ற ஸாரங்கமும் இலகும்நந் தகமேந்தி.



3

ஸ்ரீபதி தன்சேவை ஸ்ரீபூமி நீளையுடன்
ஸ்ரீகா மாய் ஸாதித்தும்.
பாப ஹரிதராக்கி பக்தர்க ளின்மனஸ்
தாபங்க ளைத்தீர்த்தும் தன்மதம் அருளவே.

ஸோமசர்மாவென்னும் மறையவனாகிய ப்ரம்மராக்ஷதனும்
சுகுணவானென்னும் மகாராஜனாகிய நம்பாடுவானும்
தங்களிடத் தன்புகூர்ந்துத் திருக்காக்ஷி யளித்தாட்கொண்ட
ஸ்ரீ சுந்தரபரிபூரண சுவாமியைத் துதிப்பது.

நாதபிந்து கலாதி நமோ நமோ என்ற வர்ணமெட்டு.

பாஹி அழகிய நம்பி நமோநமோ
பக்த வத்ஸல சுவாமி நமோநமோ
பாஹி சுந்தர பரிபூர் ணனெனபக்ஷி
பாகா ந. மோ.

ஆஹி பூதனை யையனுமிந் திரனும்
அண்ட மாதிய ரும்பணிந் தேற்றிடும்
ஆஹி சயனஸ்ரீ அம்புஜ நாபனே
ஐயா ந மோ.

தேஹி ஆண் மூலாந மோநமோ
தென்கு றுங்குடி வாஸாந மோநமோ
தேஹி தீனத யாளா திருவுறையும்
தேகா ந மோ.

பாஹி வில்சங்க சக்ரம்ஸா ரங்கம்கதை
பதும மும்தரித் தும்அப யகரா
பாஹி வாயோங்கி யெங்களை யாட்கொண்ட
பானே ந மோ.

## மலடிவயிற்று மகன்போலே என்ற வர்ணமெட்டு.

கனகபீ தாம்பர தாகரு ணாலய
கார்முகில் வண்ணகெரு டாருடா
கமலேம னோஹரா காமித தாயக
கம லா க்ஷா.

ஸனகஸ நந்தன னாதிய ரும்துதி
சாற்றிப் புகழும்ஸஜ்ஜ னபோஷகா
ஸரஸிஜ நாயகீ ஸத்வகு ணாத்மக
ஸர் வே சா.

இனகுல ராமனும் யெதுகுல கிருஷ்ணனும்
இந்நிலத் தினிலுறை மாந்தருக்கு
இகபர ஸாதக மடையும் நெறிவிதித்த
இறை யோ னே.

தினகர கோடிதே ஜோமய வடிவனே
திருக்குறுங் குடியில்வ ஸிப்பவனே
திருவுளம் கூர்ந்துமெ யெங்களை யாட்கொண்ட
திரு மா லே.

## மருவே செறித்த குழலாள் என்ற வர்ணமெட்டு.

கருணா கரப்பேர் தவரு மனுந்தன்
கழலேற் றிபோற்று மடியார்க்கு
கனவுநக் கனென்றும் புவிமீ தருமன்
காப்பாற் றியோக்கும் கமலாக்ஷா.

வருணா லயத்தை மதனம் செய்வித்து
வருவித் ததிவ்ய அமுதத்தை
வானோர் களுக்கு கனுவா யளித்த
வனஜாட் சனுந்தன் கழல்போற்றி.

வரிஞாட் சியர்க ளாம்கோ பிமாரின்
அகத்துட் புகுந்து மறைவாக
அழகா வெண்ணெய் தயிர்பால் கவர்ந்து
அன்பர்க் குயீந்து உண்டோனே.



சானும் புரோரு ஹமனைப் பணிந்து
சாற்றற் கொணாத தின்காக்ஷி
சரியா ககண்டின் களித்தோம் குறுங்கை
சாக்ஷாத் கரித்த சர்வேசா. ௧.

## வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

ஜலஜாக்ஷ ரிஷிகேசா ஜலதிசய னஸ்ரீசா
ஜெகங்களீ ரேழைப்பரி பாலிக்கும் சர்வேசா
ஜென்மஸார்த் தகமாக்கி அடியாரை யாண்டருளும்
ஜெக தீ சா.

பலவானு மியபலியால் பாகசா தனனயர்ந்தான்
பாதமே கதியென்று சரண்புகுந்தி டவேதேற்றி
பார்க்கசிறு வாமனனாய் மூன்றடிமண் யாசித்திப்
பார் மீ தில்.

மலைபோல வேவளர்ந்து மாபலியின் முடிமீதுன்
மலர்பாதம் வைத்தழுத்தி மண்ணுலகின் கீழ்சேர்த்து
மாக்ஷிமிகும் புரந்தரனுள் மகிழ்வெய்த வேகாத்த
மறை மூ லா.

பலவாராய்த் துதித்தேற்றும் பலியின்வேண் டுதலுக்குவந்து
பாரில்திருக் குறுங்குடியி லேந்தநம் பியாய்க்காக்ஷி
பரிவுடனே யளித்தோங்கும் பரத்துவனே ஸ்ரீசங்கா
பரி பூர் ணா. ௨.

## தொந்தி சரிய என்ற வர்ணமெட்டு.

அழக நம்பிராயா உனதுதிரு
அருளுக்கு நிகருண்டோ அவனியிலே
அடிமையா மெங்களுக்கு அரியகாக்ஷி
அளித் தோ னே.

பழவி னைகள்போக்கி பரிவுடனே
பக்தரை யாழ்பவனே ஸ்ரீசனே
பாமனு மஜநீந்த்ர ருதியரும்
பணி பா தா.

பழியும் பாதகங்கள் செய்துழன்ற
பதிதனு மஜாமிளனுன் நாமம்கூற
பரம பதந்தையன்பா யீந்தாட்கொண்ட
பரந் தா மா.

எழில்மி குழ்குறுங்கை பதிவிளங்கி
எங்கும்வ்யாபி யாயும் ஜெகங்களி
லேழைக் காத்துவோங்கும் அன்பருக்
கெளி யோ னே.

பாதிமதிக்கு ஜிபோதுமணிஜடை நாதனருளிய குமரேசா என்ற வர்ணமெட்டு.

சுந்த ரபரி பூர்ணத யாதர
அபங்க ளருளும்கரு ணாகரனே
சுத்தஸாத் வீகமு மெய்ப்பொரு ளாகியும்
சுஜனர்க ளேற்றிடும் சுசரித்ர.

பந்த பாசங்க ளென்று மணுகிடாமல்
பார்மிசை யன்பரைக் காப்பவனே
பாற்க டல்சய னுபா மேஷ்டியை
பண்புட னருளிய பரந்தாமா.

இந்தி ரையைத்திரு மார்பினி லேற்றவா
இருநான் கெழுத்துக் குடையோனே
ஈச னேரிஷி கேசகோ விந்தனே
ஈரைந் தவதார மெடுத்தோனே.

செந்தி ருவுறையும் செழித்தக் குறுங்குடியில்
செல்வமா யோங்கிவ ளர்பவனே
செவ்வை யாகவே யெங்களை யாட்கொண்ட
சேஷசயனஸ்ரீ ஜெகதீசா. ௪.

சரணகமலாலயத்தில் என்ற வர்ணமெட்டு.

வடிவழக கம்பீரா யனையுந்தன் றிருக்காகதி
வண்மைதனைப் புகலவிப் புவிமீதில்
வல்லவர்க ளும்முனிவோ வாரிதியி னிற்றுயிலும்
வாரணரெட் சகனேஸ்ரீ வன ஜா க்ஷா.



புடவியின் னதிபதி ளுன்குபுவ னங்களையும்
புகழ்மேவும் திருவுதரத் தினில்வைத்து
புவிலயனும் கரிஹரனும் புரந்தரனும் தொழுதே
புதுமையாய்க் காக்கும்புஷ்க ராக்ஷ பா.

வடிவிலதும் சங்கம்சக் கரமும்ஸா ரங்கம்கதை
வாய்ந்தபது மத்துடனே வாளேந்தி
வனதுளவ மாலையீ தாம்பரமும் கௌத்துவம்ஸ்ரீ
வத்ஸமரு வும்பூண்ட வல் லோ னே.

அடவிதனி லெங்கன்பா லன்புகூர்ந் தாட்கொண்ட
ஆதிமூ லப்பொருளே அகிலேசா
அவனிமிசை குறுங்குடியி லேந்துவடி வாயோங்கும்
ஐயஸ்ரீ சுந்தர பரி பூர் ண. ௨.

கருப்பத்தூரிப் பிறவாதே கனகப் பாடுற்றுழலாதே என்ற வர்ணமெட்டு.

ஸ்ரீசுந் தரபரி பூர்ணேசா சின்மயவடிவனே பவநாசா
ஸ்ரீகர னேயடி யார்நேசா ஸ்ரீமகாலெக்ஷ்மியின் ப்ராணேசா.

வாசவ னரனயன் பணிபாதா வண்மைசேர் ஸத்குரு னவிஜோதா
வனஜனுக் காரண குருநாதா வாரண பாலனே ஜெகநாதா.

ஸாசிர நாமனே ஸர்வேசா ஸர்வவி யாபக லோகேசா
ஸனகஸ ளாதியர் மனவாசா ஸாவிஜாயனே ரிஷிகேசா.

குஸும சாபன்பிதனே குணபூர்ண குறித்தயிடத்திலெக்கும் பரிபூர்ண
குழல மகற்றியெங் களையாண்ட குறுங்குடி யுறைமரகதவர்ண ஸ்ரீ.

சிறந்தவரும் கரியுரிபோர்வையும் என்ற வர்ணமெட்டு.

சிறந்த நூபுரம் பாடகந் தொலிமலி சீர் பாதா—ஐயா
சீர்மி குந்தபீ தாம்பரந் தையுடுத்த ஸ்ரீ நா தா.
பறந்த மார்பினில் கனகமுக் நூலும்பங் கஜ சே யும்—ஐயா
பண்பு தழ்ந்திடும் கௌத்துவ மணியணிந் துள நா தா.
நிறைந்து லவம்பூண் டியர்திருக் கரங்களி லெழில் மே வும்—ஐயா
சக்கரம் ஸுதர்ஸன மாதிய மேற்றகு ணவி னோ தா.

செறிந்த குழல்குறக் கைவல்லி ஸ்ரீபூமி நீளா வும்—ஐயர
சேர்ந் துணைப்புடை சூழ்ந்தில கும்குறவ குடிகொ தா. சி

விருத்தம்.

இவ்வித மிரண்டுபேருக் கினியநற் காக்ஷியீந்தும்
ஒவ்வொரு வர்களுள்ளில் ஓங்கிமுன் செய்தீவினையை
செவ்வையா யவரேயுணரச் செய்தவர் ஜென்மம்போக்கி
அவ்விரு வற்கும்முக்தி அன்புகூர்ந் தளித்திட்டானே.

முக்தி முழுதுகிற பெண் மீனையெனக்கொரு என்றவர்ணமெட்டு,
இராகம் தன்யாசி தாளம் ஆதி.

பல்லவி.

சாயுஜ்ய மடைந்தார்கம் பாடுவானும் அரக்கன்
சர்வோத்த மனை சேவித்து.

அநு பல்லவி.

மாயபாச சங்களாதி மன்னுல கின்பந்தத்தை
காயஜ னையனிட கருணையால் ஜெயித்தோங்கி.

சரணம்.

1

கரியமால் தரிசனம் கண்ணுள் குளிரப்பார்த்து
கர்ம வினையை ஒழித்து
ஹரயாம் அழகம்பி யின்திருத் தாட்பணிந்து
ஹரிஹரி யென்றுஸ்துதி செய்து மனம்கனிந்து.

2.

நீலமே கஸ்யாமள வண்ணன் புகழைப்பாடி
நிலையான பதத்தை நாடி
பாலும்நீ ரும்போல பக்தர்கள் ஒருமித்து
நாலும் ஆறுருபனை காத்தழும் பக்துதித்து.

3

தேவர்கள் கற்பக மலர்மழை வருஷிக்க
தேவதுந் துபி யொலிக்க
பூவல கும்விண்ணும்ஸம் பூர்ணமாய் செழிக்கவும்
பூசுர வேங்கட ராயன்சொல் சிறக்கவும்.



விருத்தம்.

1

முற்பகல் செய்தவெழுவி முடிவரு தழிக்கசோதான்
பற்பல கலைபுணர்ந்த பார்ப்பன னரக்கனும்
அற்பசன் டாளனும் அரசனும் காவிநிக்க
கற்பனை போனுதித்துக் கலரும் கழித்திட்டாரே.

2

முற்பக விழைத்தவினையால் முதுமறை யோனும்வேந்தன்
உற்பவ மகிமையைத் துழன்றும்தம் மல்லல்போக்கி
கற்பக காட்டின்கோவும் கஞ்சனும் பலனும்போற்றும்
ஸற்பச யனன்போன்பால் ஸாயுஜ்ய மெய்தினரே.

மங்களம்.

ஆதிமூல மானதேவ—என்ற வர்ணமெட்டு.
இராகம் ஸுரிட்டுகான்தோடி தாளம் திருப்ப டிகம்

பல்லவி.

மங்களம் மங்களம் ஜெய மங்களம்

அநு பல்லவி.

அங்கஜபித அமரசேவித ஆச்சரி பூர்த்திதா
மங்களகர மந்தார மால ஞானஞான
சங—க—சக்—ர
சங்கசக்ர பாணியுனக்கு சர்வமங்களம்.

சரணம்.

1

மச்ச கூர்ம வராஹநார ஸிம்மமறு
மாணி வச்சில் இனகுலத் திறைவர்மார்த்தனு
பச்சைமேனி பலனுதன பக்தபாலனு
அச்—சு—த—னே
அச்சுதனே உனதுதிருவ டிக்குமங்களம்.

2

தாசரதி புத்ர கிருஷ்ண கல்யாணலா
தாஸ போஷ வாஸுதேவ தானவாந்தக
ஸ்ரீசனேஸ்ரீனி வாஸனேரிஷி கேசஜெகதீசா
பா—ச—பந்—த
பாசபந்த மோசனுவு னக்குமங்களம்.

3

அம்புவிப்பு கழ்குறுங்கை பதியி லோங்கும்ஸ்ரீ
அழக நம்பி யேநம்பாடு வாரைக்காத்தவா
உம்பர்கோன்முறை கேட்டுவந்தவா உலகளந்தவ
அம்—பு—ஜா—க்ஷ
அம்புஜாக்ஷ வெங்கட்ராய னகத்துளமர்ந்தவா.

வாழி விருத்தம்.

வாழிஸ்ரீ அழகநம்பி வாமருள் குறுங்கைவல்லி
வாழிநான் மறைபுராணம் வானவர் முனிவோர்மாந்தர்
வாழிதென் குறுங்கைதன்னில் வளர்ஜீயர் மடமுமோங்கி
வாழிவேங் கடராயன்சொல் வளமலிந் துலகில்வாழி.

சுபம்! சுபம்!! சுபம்!!!

# நம்பாடுவார் சரித்திர முற்றிற்று.



உ
ஸ்ரீராமஜெயம்.
முருகன் றுணை.

# சாற்றுக் கவிகள்.

இந்நூலியற்றியவரின் ஞான குருநாதராகிய
ப்ரம்மஸ்ரீ
திரு. அ. சிவானந்த சாகர யோகீசுவரர்
அவர்களா லியற்றியவை.

சீர்மலி திருக்கு றுங்குடி நம்பி
சேவடிப் புகழினைப் பாடும்
ஏர்மலி நம்பா டுவன்றிருச் சரித
மெழில்மிகும் காவ்ய மாகப்
பார்மலி தமிழி லியற்றினன் மடவார்
பலரு மெளிதுற வுணர்ந்து
கார்மலி நிரையங் கடந்து பேரின்ப
கதியடைந் தினிதுயு மாறே.

செந்தமிழ் மாராட் டிரண்டெனுங் கீர்த்தி
செப்புகன் னடமுத லான
ஐந்துபா ஷையினுஞ் சதுரய மமைய
வழுவெனக் கவிசொலுந் திறலோன்
பந்தமா கடந்து சிந்தனைக் கடங்காப்
பரம்பொரு ளிணையடிக் கமலம்
வந்தனை புரியும் வேங்கட ராய
வரகவி சகுண வேதியனே.

தென்காசி சுவாமி சந்நிதித்தெரு
ச. மாடசாமிப் பண்டாரம் இயற்றியது.

நம்பார் கழனித் திருக்குறுங்கைக் கண்ணர்க் கரிய அடியவராம்
நம்பா டுவாரின் சரிதமதை நாம்பா டுவேதந் தகுதியென
நம்பார் முனிந்து தொடைமாப்ப மால்வேங் கடராய் செவிக்கினிக்
செம்பா கமுற கீர்த்தனத்தைச் செய்தான் தேவர்க்கு மினிதமைய.

கடையநல்லூர் ப்ரம்மஸ்ரீ

வெங்கடேசுவர சாஸ்திரிகள் அவர்களாலியற்றியவை.

பதிகொடிருக் குறுங்குடிவா ழழகியநம் பிபைப்பணிநம்
 பாடு வார்நற்
கதிகொடிருக் கதைநவின்றூ ணிசைவளர்செந் தமிழ்மொழியின்
 கனிந்த பாவால்
அதிமதுரக் கருப்பிரதத் துடன்றெருமுக் கனிரஸஞ்சேர்
 ஆரிய தேனும்
இதுதருசெஞ் சுவையளிக்குந் திறமிலதென் றறிவுடையோ
 ரியம்பு வாரே.

அன்னவன்யா ரெனின்மறையோன் வரகவிவெங் கடராய
 னறிஞர் நண்பன்
நன்னகர்சே லத்துறைவோன் நலந்தருதெய் வத்தலச்சீர்
 நவிலு நீரான்
கன்னடமா ராட்டிரமிந் திவடுகுசெந் தமிழுணர்வான்
 கவிதை வல்லான்
அன்னவன்சூழ் மேதினியிற் பெறலருமோர் புகழுடனீ
 டூழியன் வாழ்க.

தென்திருப்பேரை தேவஸ்தானம் ஜோஸியர்

ப்ரம்மஸ்ரீ பிச்சுவய்யங்காரவர்களா லியற்றியது.

கனபனசப் பொழிற்குறுங்கை நம்பிரான்
 கமடுளவம் புனைக்கலரோ ருறபா தத்தான்
தினமனதைச் செலுத்தியநம் பாடுவான்றன்
 சீர்க்கிதனைக் கீர்த்தனத்தாற் செய்தான் யாரென்
றெண்ணினவி னருட்கவிவேங் கடராய
 னெனவுரைப்பே னவனுறையூ ரெதுவென் றாலோ
வனவனசத் திருக்குமரு காங்கள்பாடும்
 வளவயல்சூழ் சேலமென வழுத்துவா மே.

வாசுதேவநல்லூர்

ப்ரம்மஸ்ரீ V. நாகமய்யரவர்களா லியற்றியது.

சீர்நலந் திகழ்நம் பாடுவான்சரிதம் சிறந்தநற் றமிழிலன்பாய்
நீர்வளம் பெருகும் சேலமாநகர்வாழ் நேர்கவி வேங்கடராயன்
பார்மிசை விளங்கும் நாவலற்கழுதாய்ப் பகர்ந்தன னினியநன்வாக்கால்
கார்வளங் குவதுங் கவிவளங்குவதுங் கண்ணியத் தண்ணளியன்றே.

வாசுதேவநல்லூர் தேவஸ்தானம் கர்ணம் குமரகுருபரதாஸன்

ப்ரம்மஸ்ரீ வை. கிருஷ்ணய்யர் அவர்களாலியற்றியது.

சீலந் தருமிகு ஞானமு திக்கிடுந் தீவினை விட்டகலும்
ஞாலம் புகழ்திரு வாழுது றுங்குடி நாதன ருள்மலியும்
தூலந் தரித்தவர் யாவரு மேத்திட தூயசு கம்பெருகும்
சேலம் வரகவி வேங்கட ராயன் செப்பிய செந்தமிழே.

வாசுதேவநல்லூர்

ப்ரம்மஸ்ரீ வி. ஆர். வெங்கடராமய்யர் அவர்களாலியற்றியவை.

நீலமண்டில ஆசிரியப்பா.

1

உலகத்திற்குத் திலகம்போன்ற
சுந்தரமான சோதிபுரிதனை
சுகமாயாண்ட சுகுணவானரசன்
சற்கதியடைய சத்ரமகத்தை
வேதவிதிப்படி விப்பிரர்மூலம்
வையம்புகழச் செய்யுங்காலே
செய்கைத்தவறால் சென்மமிழந்து
ஜெம்புகப்பாஷைச் சேரிதன்னில
சாம்பான்குலத்தில் ஜன்மமெடுத்து
நம்பியின்னாம்நலம்பெறபூண்டு
பிறவிநைநீக்கி பேரின்பமுடைய
பக்தியுள்மேவி பலகாலத்திலும்

மச்சம்கோலம் கச்சபம்சிங்கன்
நந்தன்மைந்தன் தந்திவரதன்
வாமனன்ராமன் ராமனாதி
பலஅவதாரம் பாரிற்செய்து
பக்தர்குழாத்தை நித்தியங்காக்கும்
முத்தொழில்களுக்கும் மூலகாரணவன்
குமரியின்பக்கம் அமர்ந்திருக்கின்ற
திருக்குறுங்குடியில் சிறந்துவிளங்கும்
அழகியநம்பியின் கழலிணையேற்றி
கைசிகப்பண்ணில் கானஞ்செய்து
பிறவிப்பிணியின் பீடைத்தவிர்த்து
நம்பாடுவானென நற்பெயர்பூண்டவன்
நற்கதைதன்னை சொற்சுவையோடு
செந்தமிழ்பாஷையில் சிறக்கச்சொன்னான்
ஞாலப்புகழும் சேலத்தருட்கவி
வெங்கடராயன் விப்ரஸ்ரேஷ்டனே.

### நேரிசை வெண்பா.

2

ஜெப்புகப் பாஷாணச் சேரியிற் றான்செனித்த
நம்பாடு வார்பக்தன் நற்கதையை—அம்புவியிற்
செந்தமிழிற் செப்பினான் சேலத் தருட்கவிஞன்
சுந்தரவெங் கடராய துங்கன்.

### கட்டளைக் கலித்துறை.

3


ஞாலம் புகழ்ந்திடு நல்ல குறுங்குடி நம்பியின்றன்
கோலங்கண் டேத்திடத் தன்முற் பவத்தின் குறைதவிர்த்த
சீலன் அருணவான் நம்பாடு வாரின் திருக்கதையை
சேலம்வாழ் வரகவிவெங் கடராயன் செப்பினனே.



உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது:—

இந்தக்கிரந்த கர்த்தாவாகிய என்னாலியற்றியிருக்கும் ஸ்ரீமத் சங்க்ரஹ இராமாயண கீர்த்தனமும், திருப்புகழ் வர்ணமெட்டு இராமாயணமும், பாலகாண்டம்முதல் பாதுகாபட்டாபிஷேகம் வரையில் இயற்றியுள்ள ஆசிரியவிருத்தங்களும், தேவபாஷையிலுள்ள ஸ்ரீலலிதோபாக்யானத்தை தமிழில், கும்மி, கப்பல், கொண்டிச்சிந்து, முதலியவர்ணமெட்டுகளிலமைத்து இயற்றியிருப்பதையும், திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தில் வர்க்கலையென்று வழங்கும் ஜநார்த்தனக்ஷேத்திரபுராண சங்க்ரஹக்காவடிச்சிந்தும், ஸ்ரீவில்லிபுத்தூர் க்ஷேத்திரபுராண சங்கரஹஸ்தோத்திரப் பாமாலையும், பராக்கிரமகேசரி யென்னும் ஓர் அரிய செந்தமிழ் காவியமும், கூடியசீக்கிரத்தில், அச்சிட்டு வெளியிடப்படும்.

இங்ஙனம்.

அடியார்க்கடியன்

சேலம், அருட்கவி, S. T. வெங்கடராயன்

2033